சிறிமத் பகவத்கீதை



தமிழாக்கம் இ. இரத்தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[illegible]

பொதுச் செயலாளர்
கொழும்புத் தமிழ்ச் சங்கம்.

15/9/91

சிறிமத்
பகவத் கீதை

தமிழாக்கம்: இ. இரத்தினம்

University of Peradeniya
29 DEC 2021
LIBRARY

704892

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

© உரிமை பதிவு;
முதற்பதிப்பு பங்குனி 1991

விலை:	இந்திய ரூபாய்	15.00
	இலங்கை ரூபாய்	40.00
	ஆஸ். டாலர்	3.00

கிடைக்கும் இடங்கள்:

காந்தளகம், 834 அண்ணா சாலை, சென்னை 600 002.
கொழும்புத் தமிழ்ச் சங்கம், 57வது ஒழுங்கை, கொழும்பு-6
திருமதி. ஞானம் இரத்தினம், 5/17, George Street, Burwood, NSW 2134 Australia

ஒளிஅச்சுக்கோப்பு, அச்சிடல்: *காந்தளகம்,* சென்னை 600 002, தொலைபேசி 834505

29 DEC 2021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. இ. இரத்தினம்

தோற்றம்: 17.8.16 — மறைவு: 21.3.81

University of Peradeniya
29 DEC 2021
704892
Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவர்க்குச் சமர்ப்பணம்

நினைவு தெரிந்த நாள் முதலாய் எனக்கு
நிழலளித்துப் பின் என் நிழல் போல் நின்று
என் இன்பதுன்பம் அனைத்திலும் உவந்தும் உழன்றும்
தன்உறவெலாம் துறந்து என் உறுதுணையாகிப் பின்
தள்ளாமை தோன்றத் தானும் ஓர்மழலைபோல் என்
அரவணைப்பில் அணைந்த என் அன்பு அன்னைக்கும்

கல்வி எனும் கனலை என்னுள் மூட்டி உலகக்
காவியம் அனைத்தும் எனக்கூட்டி
நல்லதும் அல்லதும் விரித்து உலக அறம் உரைத்து
நயமுடன் என்னையோர் உருவாக்கி
காதல் அரும்பியதும் எனைக் கைப்பிடித்துக்
கண்ணிமை போல் காத்து நின்றென்
காரியம் யாவினும் கைகொடுத்துப் பின்
கணப்பொழுதில் பிரிந்து கதறியழவுந் திறங்கெட்ட என்
நெஞ்சில் அழியாத ஊனத்தை விட்டுச் சென்ற
என் அன்புக் கணவற்கும்

ஞானம் இரத்தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகவுரை

1980 ஆம் ஆண்டு இறுதியில் என் கணவர் திருவாளர் இ. இரத்தினம் அவர்கள் நோயுற்றிருந்தபோது பகவத்கீதையைத் தமிழில் மொழிபெயர்க்கத் தொடங்கினார். உடல் உபாதையால் துன்புற்ற போதிலும் தன்னுள் ஓர் உத்வேகம் இம்மொழிபெயர்ப் பைப் பூர்த்தியாக்கத் தூண்டுவதாகக் கூறி இயன்றபோதெல்லாம் எழுத்து வேலையில் ஈடுபட்டு அப்பணியை ஏறத்தாழப் பூர்த்தி யாக்கிவிட்டார்.

1981 ஆம் ஆண்டில் அவர் மறைவின்பின் எமக்கேற்பட்ட பல இன்னல்களாலும் இந்நூலை அச்சிட்டு வெளியிடும் பணி பத்தாண்டாகத் தடைப்பட்டுவிட்டது.

யாழ்ப்பாணத்திலுள்ள இணுவில் எனும் கிராமத்தைப் பிறப் பிடமாகக் கொண்ட இரத்தினம் அவர்கள் இறைபக்தியும் தமிழார்வமும் மிக்கவர். காலஞ்சென்ற புலவர் சிவன் கருணா லய பாண்டியனாரிடம் தமிழ் இலக்கணம் இலக்கியம் சைவ சித்தாந்தம் பயின்றவர். இலங்கை அரசாங்க சேவையில் கல்வித் திணைக்களத்தில் மொழி பெயர்ப்புத் துறையிலும் சொல்லாக்கத் துறையிலும் பல்லாண்டு உழைத்தவர். முத்தமிழிலும் ஈடு பாடுள்ள இரத்தினம் அவர்கள் எழுதிய நாடகங்கள் நாட்டிய நாடகங்கள் இசை நாடகங்கள் பல இலங்கை வானொலியில் ஒலி பரப்பாகின; இலங்கையில் பொது அரங்குகளில் மேடை ஏற்றப் பட்டன. இவர் எழுதிய கவிதைகள் கட்டுரைகள் ஈழத்துப் பத்திரி கைகளுள் அவ்வப்போது வெளிவந்துள்ளன. வானொலியில் இடம்பெறும் உரையாடல் அரங்குகளில் இரத்தினம் அவர்களின் சொல் நயம் கேட்டு மகிழ்ந்தவர் பலர்.

பத்தாண்டுகட்கு முன் ஈழத்தில் தமிழ்ப்பணியில் ஈடுபட்டோர் யாவரும் காலஞ்சென்ற இ. இரத்தினம் அவர்களை நன்கறிவர். இந்நூல் பகவத்கீதையின் மொழிபெயர்ப்பு, விளக்க உரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று. ஆதலால் மூல நூலைப் படிப்போர்க்குப் பொருளை அறிந்து கொள்வதில் உள்ள இடர்ப்பாடு மொழிபெயர்ப்பைப் படிக்கும்போதும் ஏற்படுவது இயல்பே. சொல்லாக்கத் துறையில் ஈடுபட்ட நூலாசிரியர் சொற்களை விரித்துரையாது செறிவாக்கியாளும் கொள்கையுடையவர். இக்கொள்கையில் விளைந்த புதுப் பிரயோகங்களை நூலில் ஆங்காங்கு காணலாம்.

நூலாசிரியர் பூர்த்திசெய்யாதுவிட்ட கடைசி 34 சுலோகங்களையும் இயன்றவரை அவர் நடையில் ஆக்கி, முழு நூலையும் மூலத்துடன் ஒப்பிட்டு நோக்கி ஏற்புடையன எனக்கருதிய வெகு சில மாற்றங்களையே செய்து இந்நூலை வெளியிடுகிறோம்.

ஞானம் இரத்தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிமத் பகவத்கீதை

முதலாம் அத்தியாயம்

திருதராட்டினன் கூறினான்

1. போர்விரும்பித் தருமச் சேத்திரக் குருச்சேத்திரத்தில்
திரண்ட பாண்டவர், நம்மவர் என்ன செய்தனர் சஞ்சய!

சஞ்சயன் கூறினான்

2. அரசன் துரியோதனன் பாண்டவர் தம் அணிபடை
கண்டதும் ஆசானை அணுகி வருமாறு அறைந்தனன்

3. குருவே உங்கள் சீடன் வல்லவன் துருபதன் மகன்
அணிவகுத்த பாண்டு புத்திரர் படையினைப்பாரும்

4. வீரர் பெருவில்லியர் போரில் வீமவருச்சுனர் ஒத்தவர்
யுயுதானன் விராடன் பெருந்தேர் வீரன் துருபதன்

5. திருட்டகேது சேகிதானன் வீரியன் காசிராசன்
புருசித்து குந்திபோசன் நரபுங்கவன் சைபியன்

6. வலிமைமிகு யுதாமன்யு வீரியன் உத்தமௌசா
சுபத்திரைமகன் திரௌபதி புதல்வர் மகாரதர் ஈண்டினர்

7. எம்மவருள் உயர் புகழ்சேர் படைத்தலைவரை,
அந்தணர் திலக, தாங்கள் அறிதற் பொருட்டு நான்
இங்கு கூறுவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. கருணன் வீட்டுமர், தங்களுடன் அரும்போர் கிருபர்
அசுவத்தாமன் விகர்ணன் சௌமதத்தி சயரதன்

9. இன்னும் எனக்காக உயிரீபவர் போர்த்திறம மிக்கோர்
பல்வகைப்படை ஆள்வதில் சூரர் என்னுடன் உள்ளனர்

10. வீட்டுமர் காவல் கொள் எம்படை எல்லையற்றது
வீமன் காத்திடும் அவர்படை வரையறை கொண்டது

11. அணிவகுப்பெங்கணும் அவ்வவர் இடமே நின்று
நீங்கள் எல்லீரும் வீட்டுமரைச் செவ்விதில் காப்பீர்

12. வல்லவர் மூத்த குருவவர் பாட்டனார் அவன் உளம்
கிளரவே சிங்கநாதம் செய்து சங்கை ஊதினார்

13. பின்பு சங்கு பேரிகை தம்பட்டம் பறை
திடீரென முழங்கவும் அது பேரொலியானது.

14. பின்பு வெண்பரி பூட்டிய உயர்தேர் வீற்றிரு
மாதவன் பாண்டவர் தெய்வச் சங்கு முழங்கினர்

15. இருடிகேசன் பாஞ்சசன்யம் தனஞ்செயன் தேவதத்தம்
பயச்செயல் உலர்வயிற்று வீமன் பௌண்டரம் ஊதினர்

16. குந்திபுத்திரன் இராசன் யுதிட்டிரன் அனந்தவிசயம்
நகுலன் சுகோசம் சகதேவன் மணிபுட்பகம் முழங்கினர்

17. பெருவில்லி காசிராசன் மகாரதன் சிகண்டி
திருட்டத்தியுமன் விராடராசன் பிறர் வெல்லரும் சாத்யகி

18. துருபதன் திரௌபதியர் பெருந்தோள் சுபத்திரை புதல்வன்
யாவரும் தனித்தனி சங்குகள் எடுத்து முழங்கினர்

19. அப்பெரு முழக்கம் விண்மண் எதிரொலித்து
திருதராட்டிரர் இருதயம் அறப்பிளந்தது

20. போர்த்தலைப்படு திருதராட்டிரர் நின்றதைக் கண்ட
வானரக் கொடியோன் அருச்சுனன் அம்புகள் பறக்குமுன்
வில்லேந்தியவாறு கண்ணனுக்கு இச்சொல் கூறுவான்.

அருச்சுனன் கூறினான்

21-22. யாருடன் நான் போரிட வேண்டுமென்பதை அறியவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்முனைந்து நம்முன் நிற்பார் யாரென்பதை அறியவும்
படைகள் இரண்டுக்கு மிடையில் என்தேரை நிறுத்துக, அச்சுத

23. ஏனெனில் கெடுமதியாளன் துரியோதனற்கு இதஞ்செய
விரும்பி இங்கு திரண்டோரை நான் காண வேண்டும்

24-25. திருதராட்டிர, குடாகேசனிவ்விதம் ஏவவும்
வீட்டுமர் துரோணர் மன்னர் பலர்க்கும் எதிரில்
இருபடை மத்தியில் இருசிகேசர் உயர்தேர்
நிறுத்தியே, பார்த்த கௌரவரைப் பாரெனப் பகர்ந்தனன்

26. அங்கு பார்த்தன் படைகளிரண்டிலும் தாதையர்
பாட்டர் குருமார் சோதரர் மாமன் மாதுலர்
புத்திரர் பேரர் தோழர் அன்பரைக் கண்டனன்

27. குந்திமகன் அங்குள உற்றார் யாவரையும் நோக்கவும்
இரக்கம் மேலிட மனந்தளர்ந்து துயருடன் சொல்லுவான்.

அருச்சுனன் கூறினான்

28. கண்ணா, போரிடத் திரண்ட உறவினரைக் கண்டு
என் உறுப்புகள் சோரும் வாயும் வரளும்

29. என்றன் உடலும் நடுங்கும் மயிர் கூச்செறியும்
கைநின்று காண்டிவம் நழுவும் தோலெலாம் எரியும்

30. நிற்கவும் ஆற்றேன் உள்ளமோ சுழலும்
கேசவ கேடுகள் சூழும் குறிகளை எங்கும் நான் காண்கிறேன்

31. போரில் உறவோரைக் கொல்வதில் நன்மைநான் கண்டிலன்
கண்ணா வெற்றி இன்பம் அரசு நான் வேண்டிலேன்

32. அரசு, போகம், வாழ்க்கையால் ஆம் பயன் என்ன?

33. யார்பொருட்டு யாம் பேரரசு இன்பம் போகம் விரும்பினம்
அவர்களே வாழ்வு சுகம் துறந்து இப்போரில் கூடியுளர்.

34. ஆசார் தந்தையர், மக்கள், பாட்டர், பேரர்
மாதுலர், மாமன்மார், மைத்துனர், மணஉறவினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

35. என்னை இவர் கொல்லினும் மூவுலகாளவேனும் இவரை
நான் கொல்லேன்
புவி பொருட்டு இவரைக் கொல்வனோ மதுசூதன!

36. திருதராட்டிரரைக் கொல்வதால் நமக்கு இன்பம் ஆமோ
இக்கேடரைக் கொன்றால் நமக்கு ஆவது பாபமே

37. உற்றார் திருதராட்டிரரைக் கொல்லற்கு நாம் உரியரோ
உற்றாரைக் கொன்று நாம் இன்பம் பெறுவமோ மாதவா.

38. பேராசையால் மதியழிந்த இவர் குலநாசக்கேடு
நட்பு வஞ்சக நாசம் இவற்றைக் கருதிலர் எனினும்

39. குலநாசக்கேடு நன்றறிந்தநாம் ஏன் இத்தகை
பாவத்தினின்றும் விலகலாகாது சனார்த்தனா.

40. குலமழியின் நிலையான குலவறங்கள் அழியும்
அறமழியின் குலம்தனை மறம் அறவே ஒழிக்கும்

41. மறம் மிகின் குலமாதர் கற்பிழப்பர் கண்ணா
மாதர் தம் கற்பழியின் வண்ணக் கலப்புண்டாகும்

42. வண்ணக் கலப்பால் குலம், அது அழித்தார் நரகுறும்
பிண்டமும் நீரும் அற்று மூதாதையரும் வீழ்வர்

43. வண்ணக் கலப்பு செயும் குலம் அழிப்பார் கேட்டினால்
என்றுமுள சாதிகுல தருமங்கள் அழியும்

44. குலதருமம் இழந்தார் நரகில் நெடுங்காலம்
வசிப்பரென்று சொலநாம் கேட்டுள்ளோம் சனார்த்தன.

45. அரசின்ப வாழ்வில் பேராசை கொண்டு
உறவோரைக் கொல்லும் பாபம் செயத் துணிவு கொண்டோம்

46. எதிர்க்காத, படைபூணாத என்னைப் படை பூண்ட
திருதராட்டிரர் கொல்வரேல் எனக்கது நன்மையே

சஞ்சயன் கூறினான்

47. இவ்விதம் கூறி அம்புவில்லைக் களத்தில் எறிந்து
தேர்த்தட்டில் துயருடன் அமர்ந்தனன் அருச்சுனன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிமத் பகவத் கீதை

இரண்டாம் அத்தியாயம்

சஞ்சயன் கூறினான்

1. இரக்கம் மிகுந்து துன்புற்று கண்ணீர் நிறைந்து கலக்குற்ற
அருச்சுனனை
நோக்கி மது சூதனர் இது கூறினார்.

2. எங்கிருந்துன்னை உயர்ந்தோர்க்கொவ்வா வானகமறுக்கும்
பழிநல்கும்
மயக்கமிது தான் இந்நிலையில் வந்து அடைந்தது அருச்சுனா

3. பேடிமை கொள்ளாதே பார்த்த இது உனக்கு ஏற்காது
அற்ப இதயத் தளர்ச்சியை விட்டொழி எழுந்திரு

அருச்சுனன் கூறினான்.

4. பகைவரைக் கொன்றோய் மதுவைக் கொன்றோய்,
பரவுவதற்குரிய
வீட்டுமர் துரோணரைப் போரில் வில்லம்பால் எவ்வாறு
அடிப்பேன்

5. மேன்மைக் குரவரைக் கொல்வதிலும் பிச்சையேற்றுண்ணல்
இவ்வுலகில் சிறந்தது.
அவரைக் கொல்லின் இம்மைப்பொருள் போகம்
குருதிதோயப் புசித்தவனாவேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. நாம் அவரை வெல்லவோ அவர் நம்மை வெல்லவோ
நல்லது எது நானறியேன்
எவரைக்கொல்லின் வாழ நாம் எண்ணோம்
அத்திருதராட்டிரர் நம்முன் எதிர்நிற்கின்றனர்.

7. இரங்கு மனமென்மையால் இயல்பழிந்து அறம் ஓராது
மனமழிந்தேன்
நான் உன் சீடன் சரணடைந்தேன் உயரறம் எதுவோ
அதை எனக்கு அருள்க.

8. புவியில் எதிர்ப்பிலா வளமுடை அரசு பெறினும் அமரர்க்கு
அதிபதியாயினும்
புலன்களை நின்றெரிக்கும் இத் துயரை அவை. போக்கும்
என நான் கருதவில்லை.

சஞ்சயன் கூறினான்

9. பகைகொன்று துயில்வென்ற அருச்சுனன் புலனாள்
கோவிந்தற்கு
நான் இனிப் போர்புரியேன் என்றியம்பிச் செயலற்றான்

10. இருசேனைக்கிடையில் இடருற்று நின்ற அருச்சுனற்கு
இருசிகேசன் நகைபூத்து இதுசொல்வான் பாரத

பகவான் கூறினார்

11. துயருறத் தகாதார்க்குத் துயர்கொண்டாய் ஞானமொழிகள்
புகல்கிறாய்
இறந்தார்க்கோ இருப்பார்க்கோ ஞானிகள் துயருறார்

12. நான் என்றும் இல்லா திருந்ததில்லை நீயும் இங்குள
அரசரும் அவ்வாறே
எங்களில் எவரேனும் இனிமேலும் இல்லாமற் போவதில்லை

13. இவ்வுடலில் ஆன்மன் குழந்தைமை இளமை மூப்பு
கொள்வதுபோல்
இதைவிட்டு வேறுடலும் கொள்ளும் தீரன் இதற்குக்
கலங்கான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. குந்தி மகனே புலன்பற்றுதலால் வெப்ப தட்ப இன்பதுன்ப உணர்வுகள்
தோன்றிமறையும் அவை நிலையற்றவை பாரதா அவற்றைத் தாங்குவாய்

15. எவன் இவற்றால் இடருறான் இன்பதுன்பம் சமமெனக் கொள்வன்
திடசித்தன் அத்தீரன் அழியாநிலை அடைதற்குரியன்.

16. இல்பொருளிற்கு உள்ளமை ஆவதில்லை உள்பொருளிற்கு இன்மையாவதுமில்லை
மெய்க்காட்சியுடையார் இவ்விரண்டினதும் உண்மையை அறிவர்.

17. உலகெலாம் நிறைத்தது எது அது அழியாதது என்றுணர்
மாறா இப்பொருளை அழிக்க யார்க்கும் இயலாது.

18. அழிவிலா என்றுமுள அளப்பரிய ஆன்மனின்
உடல்கள் அழிந்தொழியும் ஆதலால் பாரதா போர்செய்.

19. ஆன்மன் கொல்பவன் என்பானும் கொல்படுபவன் எனக் கொள்வானும் அறிவிலார்
ஆன்மா கொல்வதுமில்லை கொலப்படுவதுமில்லை.

20. அவன் பிறப்பதும் இல்லை என்றோ இறப்பதுமில்லை. ஆயபின்
அவன் அழிவதுமில்லை; இலாது பின் ஆயதுமில்லை;
பிறப்பிலி என்றுமுளன், தொல்லோன்,
காயம் கொல்படினும் அவன் கொல்படான்.

21. பார்த்தா, அவன் கேடிலான், என்றுமுளான் பிறப்பிலி மாறிலி என்று யார் அறிவனோ
அவன் யாரைக் கொல்வான் கொல்விப்பான்?

22. எவ்வாறு கந்தலாடை நீக்கி மனிதன் புதியதை அணிவனோ
அவ்வாறே தேகியும் நலிந்த உடல்களை எறிந்து புதியன வேறு எடுப்பன்.

23. கலங்கள் அவனைக் கொல்லா எரி அவனைத் தகிக்காது
நீர் அவனை நனைக்காது காற்று அவனை உலர்த்தாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. அவன் வெட்டுணான், வேகான், நனையான், உலரான்,
என்றும் எங்குமுளன், அசைவிலன், பெருநிலை
தொல்லோன்.

25. அவன் புலன்படான், கருதரியன், மாற்றமிலி என்பர்,
இவ்வாறு அவனை உணர்ந்து நீ துயர் தவிர்ப்பாய்.

26. தொடர்ந்து அவன் பிறப்பவன், இறப்பவன் என நீ கருதினும்
பெருந்தோளாய் அதற்காகத் துயருறல் தகாது.

27. பிறந்தார் இறப்பும் இறந்தார் பிறப்பும் பெறுவது உறுதி
எனின், தவிர்க்கரும் செயல்கட்குத் துயருறல் தகாது.

28. உயிர்கள் ஆதியில் தோன்றாது இடையில் தோன்றி மீள
இறுதியில் தோன்றா; இது குறித்து ஏன் துயருறல்.

29. இவனை ஒருவர் வியப்பெனக் காண்பர்
ஒருவர் வியப்பெனப் பேசுவர்
ஒருவர் வியப்பெனக் கேட்பர்
ஆயினும் மற்றொருவர் கேள்வியுற்றும் அறிந்திலர் அவனை.

30. எவர் உடலிலும் உடலோன் கொல்லப்படான்
எனவே நீ எவ்வுயிர் பொருட்டும் துயருறல் தகாது.

31. உன் கடன் கருதியும் நீ மனந்தளரல் ஆகாது
என்னை! அறப்போரிலும் வாய்த்ததொன்று அரசர்க்குண்டோ

32. வான்புகும் வாயில்போன்று இத்தகைப் போரொன்று
தானே வந்து முன் நிற்பது கண்டு அரசர் மகிழ்வர் பாரத

33. அறப்போர் இதனைக் கைவிடின் உன்னறம் உன்புகழ்
துறந்தவனாய் நீ பாபம் சேர்த்தவன் ஆவாய்.

34. என்றும் மக்கள் உன்னை இகழ்ந்து பேசுவர்
நற்புகழ் பெற்றோர்க்கு இகழ்வு இறப்பினும் கொடியது.

35. பயத்தால் போரில் பின்னிட்டாய் என்று பெரும்
தேராளர் கருதுவர்
இதுவரை இவர் புகழ்பெற்ற நீ இனி அவர் இகழ் பெறுவாய்

36. பகைவரும் நின்பலம் நிந்தித்து சொலத்தகாதன சொல்வர்
அதினினும் துன்பம் தருவன யாவுள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

37. கொல்படின் நீ வான் கொள்வாய் வெல்லின் நீ
மண்ணாள்வாய் எனவே கௌந்தேய போரிட உறுதி
கொண்டெழு

38. இன்பதுன்பம் பெறுதி இழப்பு வெற்றிதோல்வி சமனாய்க்
கொண்டு
போரிடு பாவம் நீ எய்தாய்.

39. சாங்கிய ஞானம் உரைத்தனன் இனியோக ஞானம்
உரைப்பன் அதை உணர்ந்ததும் கர்ம பந்தம்விடுப்பாய்

40. கரும யோகமிதில் கேடில்லை முயற்சி அழிவதில்லை
இதன் சிறு பயிற்சியோ பெரும் பயத்தினின்றும் காக்கும்.

41. குருகுலத்தோய் இவ்யோகத்தில் புத்தி ஒரே உறுதியானது
உறுதியிலார் புத்தி பல கிளைத்தது முடிவிலாதது

42. பார்த்த வேதவாதச் சுவை கண்டு அறிவிலார்
வேறில்லை என்று அணிமொழிகளில் வாதிடுவர்

43. ஆசைமிக்கு விண்ணகம் விரும்பி இன்பசெல்வம்
அளிக்கும் பிறவியே
கருமபலன் என விரிந்த சிறந்தமலர் மொழி பகர்வர்

44. இன்ப செல்வப்பற்று மிக்கு அறிவிழந்த இவர்க்கு
உறுதியான அறிவு உள்ளத்தில் எழாது.

45. அருச்சுனா வேதங்கள் முக்குணம் ஆய்பவை
முக்குணம் இருமை நீங்கி உறுதி உள்ளத்தோடு
உண்மையில் நின்று ஈட்டல் காத்தலின்றி ஆன்மனாயிரு.

46. பரந்த நீர் நிலையில் கிணற்றின்பயன் எவ்வளவோ
விஞ்ஞான அந்தணற்கு வேதமும் அவ்வாறே.

47. வினையாற்ற உனக்குரிமையுண்டு விளைபயனில்லை
விளைபயன் வேண்டி வினை ஆற்றாதே
வினையின்மையிலும் பற்று வேண்டாம்

48. தனஞ்செய யோகனாய் பற்றுவிட்டு வெற்றி தோல்வியில்
சமமாய் நின்று வினைசெய் சமநிலையே யோகம் என்பர்.

49. சமநிலை யோகத்தினும் பற்றுளவினைமிகக் கீழானது
தனஞ்செய
சமநிலையிற் சரண்புகுவாய் பலன் விரும்புவார் அற்பர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

50. நடுநிலை பெற்றான் இம்மையில் நல்வினை தீவினை
இரண்டும் துறப்பன்
எனவே நீ யோகம் கடைப்பிடி யோகம் என்பது
வினைமையில் செம்மை

51. நடுநிலை அறிஞர் வினைப்பலன் துறந்து பிறவிப்பிணி
அறுத்து
கேடில் நிலை புகுவர்

52. என்றுன் புத்தி மயக்கமாசை கடக்குமோ
அன்று கேட்க வேண்டியவை கேட்டவைபற்றி நீ விருப்பு
ஒழிவாய்

53. கேள்வியால் கலக்குற்ற உன்மனம் என்று ஆன்மனில்
அசைவற நிற்குமோ அதுபோது யோகம் நீ பெறுவாய்

அருச்சுனன் கூறினான்

54. ஞானம் நிலைத்து சமாதியில் நிற்பான் இலக்கணம்
என்ன கேசவா
அந்த நிலைஞானி எவ்வாறு பேசுவான் இருப்பான் நடப்பான்

பகவான் கூறினார்

55. எதுபோது ஒருவன் மனத்திலெழு காமம் அனைத்தும்
அகற்றி
ஆன்மனில் ஆன்மனால் இன்புறுவனோ அதுபோது
அவன் நிலைஞானி எனப்படுவான்.

56. துன்பத்தில் துவளாமனத்தினன் இன்பத்தில் விருப்பு
எழாதவன்
ஆசைபயம் குரோதம் அற்றவன் அவனே நிலைஞானி
முனி என்பர்

57. எங்கும் பற்றின்றி நன்மையை மகிழாதும்
தீமையை வெறுக்காதும் இருப்பான் எவன் அவன்
ஞானம் உறுதியானது.

58. ஆமைதன் அவயவத்தை ஆள்வதுபோல்
புலன்களைப் பொருள்களிலிருந்து உள்வாங்க வல்லான்
நிலைஞானி ஆவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

59. நுகர்வை ஒழித்தவனுக்குச் சுவை ஒன்றுதவிர
நுகர்பொருள்கள் ஒழியும் பரத்தைக் காணின்
சுவையும் மடியும்

60. குந்திமகனே நன்று முயலும் நல்லறிஞன் மனத்தையும்
கலக்குறும் புலன்கள் வலிந்து பற்றி இழுக்கும்

61. நிலையான மனத்தினன் அவற்றை யடக்கி
என்னைப் பரமெனக்கருதி அமைவான்
எவன் புலன்கள் அவன் வசமாயின அவன்
ஞானம் உறுதியானது

62. பொருள்களில் மனம் ஊன்றுவானுக்கு அவற்றில்
பற்று உண்டாகும்
பற்று ஆசைதரும் ஆசை குரோதம் தோற்றுவிக்கும்

63. குரோதம் பெருமயக்கம் தரும் பெருமயக்கம் நினைவழிக்கும்
நினைவழிவால் புத்தி நாசமுறும் புத்திநாசத்தால்
ஆள் அழிவான்

64. ஆயின் விருப்பு வெறுப்பு நீத்துத் தன்வயப்புலன்களால்
பொருள் நுகர்ந்து மனமடங்கியோன் உளத்தெளிவு
எய்துவான்

65. உளத்தெளிவில் அவன் துன்பமெல்லாம் மடியும்
தெளிந்த உளத்தாற்கு விரைவில் உளம் நடுக்கின்றி
நிலைபெறும்

66. நிலைபேறில்லார்க்கு ஆன்மஞானம் இல்லை
நிலைபேறில்லார்க்குத் தியானம் இல்லை.
தியானமில்லார்க்கு அமைதியில்லை அமைதியிலார்க்கு
இன்பம் எங்ஙனம் கூடும்

67. நீர்மேல் படகினைக்காற்று கவர்வது போல்
அலையும் புலன்வழி எவன்மனம் செல்லுமோ
அவன் விவேகத்தை அம்மனம் கவரும்

68. பெருந்தோளாய் புலப்பொருள்களினின்றும்
எவன் புலன்கள் அறவே அடக்கப் பெற்றனவோ
அவன் ஞானம் நிலைபெற்றதாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

69. எல்லா உயிர்க்கும் எது இரவோ அதில்
முற்றடங்கியோன் விழித்திருப்பான்
எது அனைத்துயிர்க்கும் விழிப்பு நிலை
அது உண்மைகாண் முனிக்கு இரவாம்

70. நிலைகுலையா எங்குநிறை மாகடலை நதியாவும்
எவ்வாறு அடையுமோ
அவ்வாறு எவனை ஆசையெலாம் சென்றடையும்
அவன் அமைதி பெறுவான்;
ஆசையைத் தொடர்வான் பெறான்.

71. எப்புருடன் ஆசையெலாம் விட்டுப் பற்றிலனாய்
நான் எனது என்பதின்றி உலவுகின்றான்
அவன் அமைதி அடைவான்

72. பார்த்த இதுவே பிரம்மநிலை இதை அடைந்தவன்
மயக்கமடையான்
இறுதிக்காலத்திலும் இதில் நிலைத்து பிரம்ம நிருவாணம்
பெறுவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிமத் பகவத்கீதை

மூன்றாம் அத்தியாயம்

அர்ச்சுனன் கூறினான்

1. சனார்த்தன, கருமத்திலும் ஞானம் மேலென்பது கருத்தெனில்
கோர கருமத்தில் என்னை ஏன் ஏவுகின்றாய் கேசவ

2. மாறுபடும் மொழிகளால் என்னறிவை மயக்குகிறாய் போலும்
நான் உயர்நலம் அடையும் ஒரே வழியை உறுதிகண்டு
உரைப்பாய்

பகவான் கூறினார்

3. பாபமிலாதோய், சாங்கியர்க்கு ஞானம்
கருமயோகியர்க்கு கருமம் என இவ்வுலகில்
இருநெறிகளுள என முன்னர் நான் பகன்றேன்

4. கருமந் தொடங்காமையால் ஒருவன்
கருமமற்ற நிலை எய்தான்
கருமத்தைத் துறப்பதாலும் அவன்
நிறைமை பெறுவதில்லை.

5. கணமேனும் ஒருவன் கருமமின்றி இருப்பதில்லை
பிரகிருதியிற் பிறந்த குணங்களால்
யாவரும் தம்வயமின்றி வினைப்படுவர்.

6. கருமேந்திரியங்களை அடக்கியும், புலவின்பப் பொருள்களை
மனங்கொண்டிருக்கும் மயக்க அறிவுடையான்
பொய் ஒழுக்கத்தான் எனப்படுவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. ஆயின் அர்ச்சுன, எவன் மனத்தால் ஐம்புலன் அடக்கி
பற்றற்று கருமேந்திரியங் கொண்டு வினை செய்வனோ
அவன் உயர்ந்தோன்.

8. விதித்ததைச் செய், வினை செய்யாமையின் வினை
செய்வது உயர்ந்தது
வினையின்றேல் உடலைப் பேணலும் இயலாது.

9. இறைபணிக் கருமத்தின் விலகிய விடத்து
இவ்வுலகம் வினைக்கட்டுடையது
அருச்சுனா இறைபணியெனப் பற்றின் நீங்கி
வினையினை நன்காற்றுவாய்.

10. ஆதியில் பிரம்மன் வேள்வியோடு மனிதனைப் படைத்து
இதனால் வளம்பெறுவீர், வேண்டியது ஈயும். காமதேனு
இது என்றார்.

11. இதனால் தேவரைப் போற்றுமின் தேவர் உங்களைப்
போற்றுவர்
ஒருவரையொருவர் போற்றுவராய் ஒப்பிலா நன்மை
இருவரும்எய்துமின்

12. வேள்வி போற்றிய தேவர் உமக்கு வேண்டிய
இன்பம் நல்குவர்
அவர் ஈந்ததை அவர்க்கு அளியாமல் நுகர்பவன்
கள்வனே ஆவன்.

13. வேள்வி மிச்சில் நுகர் சான்றோர் முழு விடுதலை பெறுவர்
தமக்கெனச் சமைக்கும் பாபிகள் பாபமே புசிப்பர்

14. அன்னத்தினின்று உயிரும், மழையின் அன்னமும்,
வேள்வியின் மழையும், வினையினின்று வேள்வியும் உண்டாம்

15. வினை பிரமனிலும், பிரமன் அழிவில் பரத்திலும் தோற்றம்;
ஆகவே அழிவில் பரம் வேள்வியில் என்றும் நிலைபெற்றது.

16. பார்த்தா எவன் இச்சுழல் சக்கரத்தைப் பின்பற்றிலனோ
அவன் புலவின்பம் போற்றி பாப ஆயுளில் மயங்கி
வாழ்கிறான்.

17. எவன் ஆன்மனில் அன்புற்று நிறைவுற்று இன்புறுகின்றானோ
அவன் ஆற்ற வேண்டிய வினை இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. இங்கு அவன் கருமம் செய்யுமை செய்யாமையினால்
ஆம் பயனில்லை.
எப்பயன் கருதியும் எவ்வுயிரும் அவன் நாடத்தகுந்ததுமில்லை.

19. ஆக பற்றின்றி என்றும் செய்வன திருந்தச் செய்.
ஏனெனில் பற்றிலாச் செயலால் மனிதன் பரநிலை
பெறுவன்

20. சனகனாயினார் கருமத்தினாலேயே பெருவெற்றி பெற்றனர்
உலகை நன்றுய்ப்பதற்கேனும் கருமம் செய உரியனாகின்றாய்

21. எதை எதைப் பெரியோன் பற்றி ஒழுகுவன்
மற்றையோர் அதைப் பின்பற்றுவர்
எதைக் கட்டளை எனக் கொள்வன் அதை உலகம்
பின்பற்றும்

22. பார்த்த பூவுலகினும் செயற்குரியது எனக்குச்
சிறிதும் இல்லை
எய்தப் பெறாது இனிப் பெறுதற்காயது ஒன்றில்லை
எனினும் நான் கருமத்தில் ஈடுபட்டுள்ளேன்

23. அயர்விலாது நான் செயல் முயலவில்லையேல்
மனிதர் எவ்வகையிலும் என் செயலைப் பின்பற்றுவர்.

24. அழியும் இவ்வுலகெலாம் நான் வினை செயாவிடின்
கலக்கத்தின் கருத்தாவாகி மக்களை அழித்தவனு மாவேன்

25. கருமப் பற்றுள அறிவிலாரும் வினை செய்வர் அவ்வாறே
அறிவோர் உலகை நன்றுய்க்க அவாவி பற்றின்றி
செயல் புரிதல் வேண்டும்

26. அறிவாளன் வினைநாடும் அறிவிலாரில் மனமயக்கம்
விளைத்தலாகாது
வினையை நன்றாற்றி மற்றோரையும் அதன் பால் உய்த்தல்
வேண்டும்

27. பிரகிருதி குணங்களால் எங்கும் கருமங்கள் செயப்
படுகின்றன
அகங்காரத்தால் அறிவழிந்தவன் செய்பவன் நான்
எனக் கருதுவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28. ஆயின் படைமிக்கோய், குணகரும வேறுபாட்டுண்மை அறிந்தவன்
ஐம்புல குணங்கள் ஐம்புலப் பொருட்களில் இயங்குவது அறிந்து அங்கு பற்றுறான்

29. பிரகிருதி குண அறிவிலார் குணத்தொழிலில் பற்றுறுவர்
நிறையறிஞர் அக்குறை அறிவரை நிலைகெடுத்தலாகாது

30. வினையாவும் எனக்கு ஒப்பி ஆன்மன் நீ என ஓர்ந்து
எனது இன்றி ஆசையற்று உளக்கிளர்வகற்றிப் போர் செய்க

31. செயல்நோக்கொடு பொறாமையின்றி இந்த என் மதம் எவன் மேற்கொள்வன்
அவன் வினைப் பிணியினின்று விடுபட்டவன் ஆவன்

32. எவர் இந்த என்மதம் நிந்தித்துப் போற்றிலர் அவர்
நல்ஞானமழிந்து உள்ளொளியற்று சீரிழந்தவர் என்பதறிக

33. அறிஞனும் தன் இயற்கையை ஒட்டியே ஒழுகுவன்
ஆயவை எல்லாம் இயற்கை பற்றியே ஒழுகும்
அடக்கு முயற்சியால் ஆவது என்னவோ

34. ஒவ்வொரு புலப்பொருளிலும் விருப்பு வெறுப்பு ஊடுருவி நிற்கும்
அவற்றின் வயப்படல் ஆகாது அவை இவனின் பகைவர்

35. நன்று ஆற்றிய பிறர் அறத்திலும் குன்ற ஆற்றிய தன்னறம் உயர்ந்தது
தன்னறத்தில் சாவுநேரினும் மேலாம் பிறர் அறம் அச்சம் பயப்பது

அருச்சுனன் கூறினான்

36. கண்ணா மனிதன் விருப்பிலன் ஆயினும் எவ்வகை உந்தலால்
பாவஞ் செய வலுக்கட்டாக ஏவப்படுகின்றான்

பகவான் கூறினார்

37. காமம் குரோதம் இராசத குணத்துதித்தவை
பசியும் பாபமும் மிகுந்தவை இதைப் பொல்லாப் பகையெனக் கொள்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

38. எவ்வாறு தீ புகையாலும் கண்ணாடி தூசியினாலும்
கரு கருப்பையினாலும்
மறைபடுகின்றதோ அவ்வாறு ஞானம் காமத்தால்
மறைபட்டுளது

39. ஞானிக்கு என்றும் பகையாய் காமவடிவினதாய்
நிறைவுசெய இயலாததான
இக் காமத்தீயினால் அறிவானது மறைபட்டுளது
குந்திமகனே

40. இந்திரியம் மனம் புத்தி என்பவை இதற்கிருப்பிடம் என்பர்
இவற்றால் இது அறிவை மறைத்து உடலுறைபவனை
மயக்குகிறது

41. ஆகவே பரதரேறே நீ முதலில் இந்திரியங்களை அடக்கிப்
பேரறிவுகளை அழித்துப் பாபம் சேர்க்கும் இதனைக்
கொல்வாய்

42. இந்திரியங்கள் உடலிற்பெரிய அவற்றின் மேலாம் மனம்
மனத்தில் மேலாம் புத்தி அதற்கும் அப்பாலானான்
ஆன்மன்

43. வன்தோளாய் இவ்வாறு புத்திக்கு மேலோனை அறிந்து
அசைவில் அறிவால் அசையுமனத்தை அடக்க
ஆன்மனால் ஆன்மனை அடக்கி
வெல்லரும் காமவடிவுப் பகை அழிப்பாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிமத் பகவத் கீதை

நான்காம் அத்தியாயம்

பகவான் கூறினார்

1. விவசுவனுக்கு இவ்வழிவற்ற யோகத்தை மொழிந்தேன்
விவசுவன் மனுவிற்கும் மனு இட்சுவாகிற்கும் உரைத்தனர்

2. குல்முறையின் வந்த இதைப் பெருமுனிவர் அறிவர்
பகைகொல்வோய் நாளடைவில் இவ்யோகம் நலிந்தது

3. எனக்கு அன்பனும் தோழனும் நீ என்று பழம் யோகமதனை
இன்றுனக்குரைக்கின்றேன் இது உண்மையில் நிறை
மறை மொழி

அருச்சுனன் கூறினான்

4. விவசுவன் உன்முன் பிறந்தவர் எனவே ஆதியில் அவர்க்கு
உரைத்தனை நீ என்பதை எங்ஙனம் நான் மனங் கொள்வது

பகவான் கூறினார்

5. பகைகொல்வோய், அருச்சுன, பலபல பிறவிகள் நாம்
இருவரும்
எடுத்துளோம்; நான் அவை யாவும் அறிவேன் நீ அறியாய்

6. பிறப்பும் பின்னமுமற்று பிறவிகட்கெல்லாம் முதலாயிருந்தும்
என் பிரகிருதியை ஆட்படுத்தி என் மாயையால் நான்
தோன்றுகிறேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. எவ்வெப்போது அறங்குன்றி மறம்பொன்றுமோ அவ்வப்போது
நான் என்னைப் படைத்துக் கொள்வேன்

8. அறவோரைக் காக்கவும் தீயோரை மாய்க்கவும்
அறத்தை நிலைநாட்டவும் ஊழிதோறும் நான் தோன்றுவேன்

9. இவ்வாறு என் திவ்விய பிறப்பை தருமத்தை உண்மையில்
அறிபவன்
உடல் துறந்து மறுபிறப்பு எய்தாது என்னை அடைவன்
அருச்சுன

10. பற்று பயம் சினம் நீங்கியோர் என்மயமானவர் என்னைச்
சரணடைந்தோர் பலர்
ஞானம் தவத்தால் தூயராய் என்னியல்படைந்தனர்

11. எவர் எவ்வழி என்னை நாடுவர் அவ்வழி நான்
அவர்க்கருளுவன்
ஆகவே பார்த்த மாந்தர் எவ்வகையிலும் என்வழியையே
பின்பற்றுவர்

12. மன்னுலகில் கருமபலன் விரைவில் கைகூடும் ஆதலின்
செயற்சித்தி எய்த விரும்புவார் இவ்வுலகில் தேவரை
வழிபடுவர்

13. குணமியையச் செயல்வகுத்து நால்வருண முறை
படைத்துளேன் ஆயின்
நான் அதன் கருத்தா நான் மாற்றமிலன் செயலிலன்
என்பதறி

14. கருமம் என்னைப் பற்றா கருமபலப்பற்று எனக்கு இல்லை
எவன் என்னை நன்றறிவன் அவனைக்கருமம் பிணைக்காது

15. முத்தி அவாவிய முன்னோரும் இதை உணர்ந்து கருமம்
செய்தனர்
எனவே நீயும் முன்னோர் முன்செய்தவாறு கருமம் செய்

16. எது கருமம் எது அகருமம் என இதில் பேரறிஞரும்
மயங்குவர்
எதையறிந்து கெடுதியின் விடுபடுவையோ அக்கருமம்
உனக்குரைப்பேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. விதிகருமம் விடுகருமம் அகருமம் மூன்றையும் நன்கறிய வேண்டும்
கருமத்தின் இயல்பு விளங்குதற்கரியது

18. கருமத்தில் அகருமத்தை அகருமத்தில் கருமத்தை எவன் காண்கிறான்
அவன் மனிதருள் அறிவுளான் யோகி செயற்பாலன செய்தவன்

19. எவன் கருமங்கள் ஆசையும் சூழ்வேகமும் அற்றவையோ
ஞானச் சுடரில் நீறினவையோ அவனை அறிஞர் பண்டிதன் என்பர்

20. அவன் கருமபல விருப்பற்று என்றும் உளநிறைவினனாய்
சார்பு பிறிதிலனாய் வினையில் நிலைத்திருப்பினும் கருமஞ் செயாதவனே

21. ஆசையற்று தன்னையும் உளத்தையும் அடக்கி உடைமை யாவும் துறந்தவன்
உடலால் மட்டும் கருமம் செய்து தீமை பெறுவதில்லை.

22. வலிய வருவதில் இன்புறுவானும் இருமை கடந்தவனும்
வெற்றி தோல்வி ஒப்பெனக் கொள்வானும் வினை செய்யினும் பிணிபடுவதில்லை

23. விருப்பிலனாய் விடுதலையுளனாய் ஞானநிலைச்சித்தமுளனாய்
வேள்வி பொருட்டு வினைசெய்வான் கருமம் கரைந்துபோம்

24. பலியும் பிரமம் தீயும் பிரமம் அவியும் பிரமம் இடுவானும் பிரமம்
கருமத்தில் பிரமம் காண்பான் அடைவதும் பிரமமே

25. சில யோகியர் தேவர்க்கே வேள்வி விரும்பிச் செய்வர் வேறு சிலர்
பிரமத்தீயில் ஆன்ம அவியை ஆன்மாவினால் ஓமிப்பர்.

26. வேறுபிறர் ஒடுக்கத்தீயில் செவிமுதல் புலன்களை ஓமிப்பர்
பிறர் ஒலிமுதல்வனவற்றை இந்திரியத்தீயில் ஓமிப்பர்

27. வேறுசிலர் ஆன்ம ஒடுக்கயோக ஞானச்சுடர் எரியில்
இந்திரியக் கருமம் உடன் பிராணக் கருமங்களை ஓமிப்பர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28. அவ்வாறே பொருள் வேள்வியர் தவவேள்வியர்
யோகவேள்வியர்
கற்றல் உணர்தல் வேள்வியரொடு அடங்கிய கடுந்தவத்தோர்

29. அவ்வாறே சிலர் உட்காற்றில் வெளிக்காற்றையும்
வெளிக்காற்றில் உட்காற்றையும் ஓமிப்பர்
சிலர் மூச்சின் உள்வெளிப்போக்குகளை அடக்கி
மூச்சாள்கையை மேற்கொள்வர்

30. வேறு சிலர் அளவான ஊனோடு பிராணனைப்
பிராணனில் ஓமிப்பர்
இவர் வேள்வி உணர்ந்தவர் வேள்வியால் தீமை
தேய்ந்தவர்

31. குருகுலத்தோய் வேள்வி மிச்சில் அமுதை உண்பார்
அழிவில் பிரமத்தை அடைவர்
வேள்வி இலார்க்கு இவ்வுலகில்லை அவ்வுலகு எங்ஙனம்

32. வேதவாயிலாய் வெவ்வேறு வேள்விகள் விரிந்துள
அவை யாவும் கருமத்திலானவை என்றுணர்ந்து
விடுதலை பெறுவாய்

33. பரந்தப பொருள்வேள்வியில் ஞானவேள்வி சிறந்தது
பார்த்த கருமங்கள் யாவும் ஞானத்தில் முடிவுறும்

34. பணிந்தெழுந்தும் கேள்வியாலும் பணிவிடையாலும்
அதை அறிக
மெய்கண்ட ஞானியர் உனக்கு ஞானம் உபதேசிப்பர்

35. பாண்டவா, இஞ்ஞானம் நீ அறியின் மீண்டும்
அடையாய் இம்மயக்கம்
இதனால் எல்லா உயிர்களையும் உன்னிடத்தும்
மேலும் என்னிடத்தும் காண்பாய்

36. பாவியருள் நீ மிகப்பாவியாயிருப்பினும் பாவம் யாவையும்
ஞானம் எனும் தோணிகொண்டு நன்முறையில் கடந்திடுவாய்

37. எவ்வாறு சுடர்விடும் எரி விறகினைச் சாம்பலாக்குமோ
அவ்வாறு ஞானக்கொழுந்து கருமம் யாவையும்
சாம்பலாக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

38. தூய்மை செய்வதில் ஞானத்துக் கொப்பு இவ்வுலகில் ஒன்றில்லை
யோகசித்தி பெற்றான் காலகதியில் தன்னிடத்தில் தானாக இதைப் பெறுவான்

39. பரத்திற்குத் தன்னைப் பணித்தவன் புலன் அடங்கியோன்
குறியார்வுடையான் விரைவில் ஞானம் பெற்றுப் பரமசாந்தி பெறுவான்

40. ஞானமிலி ஆர்விலி ஐயந்தெளியான் அழிவுறுவான்
ஐயமுடையாற்கு அவ்வுலகில்லை இவ்வுலகு இன்பமுமில்லை

41. யோகத்தால் கருமம் துறந்து ஞானத்தால் ஐயம் அறுத்து
ஆன்மநிலை கொண்டவன் கருமங்கள்கட்டுறுத்தா

42. ஆகவே அறியாமையில் எழுந்து உள்ளத்துறையும்
ஆன்ம-ஐயத்தை ஞானவாளால் வெட்டி யோகம்
நிலைபெற்று எழுந்திரு பாரதா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29 DEC 2021
LIBRARY

சிறிமத் பகவத்கீதை

ஐந்தாம் அத்தியாயம்

அருச்சுனன் கூறினான்

1. கருமத்துறவையும் பின் கருமம் கூடலையும் கூறினை கண்ணா
இவ்விரண்டுளும் சிறந்தது எது என அறுதியாய்க் கூறுவாய்

பகவான் கூறினார்

2. கருமத்துறவும் கருமங்கூடலும் உயரின்பம் தருபவை
இரண்டுளும் கருமங்கூடல் கருமத்துறவினும் மிக்குயர்ந்தது

3. வெறுப்பிலன் விருப்பிலன் அவன என்றும் துறவி
எனப்படுவன்
பெருந்தோளாய் இருமை கடந்தவன் பிணிப்பினின்றும்
விடுபடுவன்

4. சாங்கியம் வேறு யோகம் என்பர் சிற்றறிவினர்
பண்டிதர் கூறார்
ஒன்றில் நன்று நிலைநின்றோன் இரண்டின் பயனும்
எய்துவான்

5. சாங்கியர் எந்நிலை எய்துவர் அந்நிலை யோகியரும்
எய்துவர்
சாங்கியம் யோகம் ஒன்றெனக் காண்பவன் உண்மைக்
காட்சியோன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. பெருந்தோளாய் யோகமின்றித் துறவெய்தல் இயலாது
யோகமியைந்த முனி விரைவில் பிரம்மத்தை அடைவன்

7. யோகமியைந்தவன் தூய உளத்தன் உடல்வென்றோன்
புலன் வென்றோன் எவ்வுயிரிலும் தன்னைக் காண்போன்
கருமஞ் செய்யினும் அது அவனைத் தீண்டாது

8. கண்டு கேட்டு உண்டுயிர்த்து உள்ளறிந்தாலும்
நடந்து தூங்கிச் சுவாசித்தாலும்
மெய்யறிவன் யோகி தான் ஒன்றும் செய்திலன்
என்றெண்ணல் வேண்டும்

9. பேசினும் ஒழியினும் பற்றினும் கண்விழிப்பினும்
மூடினும்
புலன்கள் பொருள்களில் செல்கின்றன எனும்
உறுதியனாதல் வேண்டும் அவன்

10. பற்றை ஒழித்து கருமத்தைப் பிரமத்துக்கெனச்
செய்கின்றான் எவன்
அவன் தாமரை இலைமேல் நீர் அதனைத் தீண்டாதது
போல் பற்றப்படான்

11. யோகியர் பற்றழித்து ஆன்ம தூய்மைக்காய்
அகங்கழிந்த
மனம் புத்தி காய இந்திரியங்களால் கருமஞ் செய்வர்

12. யோகமியைந்தோன் கருமப்பயன் துறந்து நிட்டை தரும்
அமைதி அடைவான்
இயையாதான் ஆசையின்பாற்பட்டு பயனில் பற்றூன்றி
பிணிப்புறுவான்

13. புலனைத் தன்வயமாக்கிய தேகி மனத்தால் கருமம்
யாவும் துறந்து
ஒன்பது வாயில் நகரில் ஒன்றும் செய்யாதும் செய்வியாதும்
நலமுற வாழ்வன்

14. இறைவன் உலகத்தார்க்கு வினையாண்மை, வினை,
வினைப்பயன் பொருந்துகை ஒன்றும் படைக்கவில்லை
இயற்கையே இவை யாவற்றையும் செய்கின்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. பரம்பொருள் எவர் பாப புண்ணியங்களையும்
பொருட்படுத்துவதில்லை
அஞ்ஞானம் ஞானத்தை மறைத்துள்ளது ஆதலின்
உயிர்கள் மயக்கமுறுகின்றன

16. ஆயின் எவர் அஞ்ஞானம் ஆன்மஞானத்தால் அழிவுறுமோ
அவர் ஞானம் பரிதியைப் போல் பரம்பொருளை விளங்கச்
செய்யும்

17. அதில் சித்தமுடையராய் அதை ஆன்மனாய் அதில்
ஊன்றிய வராய்
அதை மேற்கதி என்பராய் ஞானத்தால் பாபம் நசித்தவராய்
உள்ளவர் மீளா நிலை எய்துவர்

18. கல்வி பணிவுடைய அந்தணன் பசு யானை நாய்
நாயுண்ணும் புலையன்
ஆகியோரிடத்தெல்லாம் பண்டிதர் சமநோக்குடைய
ராயி ருப்பர்

19. எவர் மனம் சமநோக்கில் ஊன்றியதோ அவர்
இங்கேயே பிறவியை வெல்வர்
பிரம்மம் சமமானது மாசற்றது அதனால் அவர் பிரம்மத்தில்
நிலைபெறுவர்

20. பிரம்மஞானி பிரம்மத்தில் ஊன்றியோன் திடபுத்தியோன்
மயக்கிலான்
விரும்பியது பெற்று மனங்கிளரான் விருப்பற்றது பெற்று
மனந்தளரான்

21. புறத்தொடர்பில் உளம் பற்றாதான் ஆன்ம சுகம் ஏதோ
அதைப்பெறுவன்
பிரம்மத்தோடு இயைந்தவன் அழிவிலா இன்பம்
பெறுவன்

22. புறத்தொடர்பின் இன்பங்கள் துயர் பயப்பவை
ஆதியந்த முள்ளவை
அறிஞன் அவற்றில் இன்புறான் குந்தி மகனே

23. எவன் உடல்விழுமுன் காமக் குரோதத்துதிக்கும்
வேகத்தை
இவ்வுலகிலேயே பொறுத்தற்கு வல்லானோ அவன்
யோகி இன்பாளன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

704892

24. அகவின்பத்தன் அகக்களிப்புள்ளான் உள்ளொளியன் அவ்யோகி
இங்கேயே பிரம்மமாகி பிரம்ம நிருவாணம் பெறுகிறான்

25. தம் தீவினை தீர்த்து ஐயம் அகற்றித்
தம்மையாள்பவராய் உலகநன்மையில் தாமின்புறும்
அறிஞர் பிரம்மநிருவாணம் பெறுவர்

26. சித்தமடங்கி சினங்காமம் விட்டுத்
தன்னையுணர்ந்த துறவியர்க்கு
பிரம்ம நிருவாணம் இருமையிலும் உண்டு

27. புறத்துள புலனுகர்வை புறம்வைத்து
புருவ நடுவில் கண்ணை நாட்டி
நாசியுள் உலவும் வெளிவளி உள்வளிகளைச் சமன்செய்து

28. புலன் மனம் புத்தி ஒடுக்கி
வீடே உயர்வென நாடி
அச்சம் சினம் காமம் அழித்த
முனி எவன் அவன் என்றும் வீடு பெற்றவனே

29. வேள்வி தவங்களை ஏற்பானும்
உலகினுக்கு இறைவனாய் எவ்வுயிர்க்கும் நண்பனும்
ஆய என்னை உணர்ந்து அவன் அமைதி அடைகின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிமத் பகவத்கீதை

ஆறாம் அத்தியாயம்

பகவான் கூறினார்

1. கருமபலன் சாராது கருமம் செய்வான் அவன் துறவியோகி
எரி ஓம்பாதவன், கருமஞ் செயயாதவன் அல்லன்

2. பாண்டவா, சங்கற்பம் துறவாதான் யோகி ஆகான்
யோகம் என்பதையே துறவு என்று கூறுகிறார்கள்

3. துறவில் உயரேற அவாவுவாற்கு கருமம் கருவி என்பர்
உயர்யோகம் எய்தியாற்கு செயலறவே கருவி

4. எப்போது ஒருவன் சங்கற்பம் துறந்து
புலப்பொருள்களிலோ கருமத்திலோ பொருந்தாது
நிற்பானோ
அப்போதவன் யோகசித்தி எய்தியவனாவான்

5. தன்னைத் தன்னால் உயர்த்துக தாழ்த்தற்க
உண்மையில் ஒருவன் தானே தனக்கு
உறவும் பகையுமாம்

6. எவன் தன்னைத் தன்னால் வென்றனன் அவன் தனக்குத்
தானே உறவினன்
வெல்லாதான் பகைவனைப்போல் பகைநிலையில்
உள்ளனன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. தன்னை வென்ற அமைதியான மனிதனின் பெருஞானம்
தட்ப வெப்பத்திலும் இன்பதுன்பத்திலும்
இகழ்வு புகழ்வுகளிலும் நிலைகுலையாதிருக்கும்.

8. அசைவிலான் புலன்வென்றோன் அறிவில் ஞானத்தில்
அமைதி கண்டோன்
மண்கல் பொன் மூன்றும் ஒக்கநோக்குவான்
அந்த யோகி சமாதியில் உறுதியானவன்

9. நல்லுளத்தார் நண்பர் பகைவர் புறக்கணிப்பார்
நடுநிலையர் வெறுப்பார் உறவோரிடத்தும்
நல்லார் அல்லாரிடத்தும் ஒரு நோக்குடையான்
உயர்ந்தோன்

10. உடைமை ஆசை அகற்றி உடலும் உளமும் அடக்கி
ஒருவனாய் வாழ்ந்து தனியனாய் மனங்குவிக்க
யோகி என்றும் முயல வேண்டும்.

11. ஓர் இருக்கை கோலி குசைப்புல் மான்தோல் துணி
ஒன்றன் மேல் ஒன்று விரித்து
மிக்குயர்வும் தாழ்வுமில்லா தூய அசையா இடத்தில்
நிலைகொண்டு

12. இருக்கை யமர்ந்து உளத்தை ஒருகூர்ப்படுத்தி
சித்த இந்திய செயல் அடக்கியோன்
ஆன்ம சுத்திக்காக யோகம் பயில வேண்டும்

13. உடல் தலை கழுத்தை அசைவின்றி ஒப்புற நிறுத்த
மூக்கு நுனியை உற்றுநோக்கி
சுற்றிவர நோக்காது

14. அமைதியினனாய் அச்சமிலாது பிரமச்சாரி
விரதத்தில் நிலைத்தவனாய் மனத்தை அடக்கி
என்னை நினைந்து பரமெனக் கொண்டு இருப்பானாக

15. இவ்வழியில் என்றும் தன்னை உறுதியாக்கி மனம்
அடக்கிய யோகி
என்னில் நிலைவதும் நிருவாணத்தில் இறுவதுமான
அமைதியை அடைகின்றான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. அதி ஊணிக்கு யோகமில்லை, அற உண்ணானுக்குமில்லை;
அதி உறக்கம் கொள்வானுக்குமில்லை
அறவே விழிப்பானுக்குமில்லை

17. உசித ஊணும் உடற்பயிற்சியும்
வினையில் உசித உழைப்பும்
உசித உறக்கமும் விழிப்பும் உடையாற்கு
யோகம் நோ துடைக்கும்

18. என்று சித்தம் நன்றுற அடங்கி ஆன்மனில் நிலைநிற்கிறதோ
என்றின்பப் பற்று அறவே அவியப் பெற்றனனோ
அன்று அவன் ஒன்றியோன் எனப்பெறுவன்

19. காற்றிலா இடத்துச் சுடர் படபடப்பதில்லை, அதனை
ஆன்மனில் யோகம் பயிலும் யோகியின்
சித்தத்திற்கு ஒப்பிடுவர் அறிஞர்

20. யோகப் பயிற்சியால் எந்நிலையில் சித்தம் அடங்குமோ
அந்நிலையில் ஆன்மனால் மட்டும் ஆன்மனைக் கண்டு
ஆன்மனில் நிறைவு பெறுகிறானோ

21 ஈறிலாததும் இந்தியம் கடிந்ததும்
வாலறிவுணரக் கூடியதும் எதுவோ
அதை இவன் உணரும்போது எதில்
நிலைபெற்றதும் மெய்ப்பொருளினின்றும்
விலகல் இல்லையோ

22. எதை அடைந்ததும் அதின் மிக்க பேறிலை என
அவன் உணர்வனோ - அதில் ஊன்றியபின்
பெருந்துயரினால் வருந்துவதில்லையோ

23. துயர் கூடல் அறுக்கும் இதுவே யோகம் என அறிக
குன்றா நெஞ்சுடன் ஓயா உழைப்புடன்
இது பயில்வதற்குரியது

24. சங்கற்பம் ஈனும் ஆசை எலாம் எச்சமின்றித் துறந்து
எத்திசையும் ஓடும் இந்தியக் கூட்டை உள்ளத்தால் தடுத்து

25. பொறுதியில் அமைந்த அறிவினால்
உளத்தை ஆன்மனில் நன்றூன்றி மெல்ல மெல்ல
அமைதி பெறல் வேண்டும்; வேறு பிறிது
உளங் கொளற்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. எது எதற்காய், அலைவதும் அறுதியற்றதுமான மனம் வெளிப்போகுமோ
அது அதனிலிருந்து அதை மீட்டு அடக்கி மீண்டும் ஆன்மனிடம் கூட்டுக

27. உயர்சாந்த உளமுடையனாய் இராசதமும் பாவமு மற்றவனாய். பிரம்மமாய் உள்ள
யோகியை உயர் இன்பம் சேரும்

28. இவ்வாறு என்றும் தன்னை ஒன்றித்து மாசு நீங்கிய
யோகி எளிதில் பிரம்மம் இயைந்த எல்லையில் இன்பம் எய்துவன்

29. யோகமியைந்த உளத்தோன் ஒருநோக்குடையனாய் ஆன்மனை எவ்வுயிரிலும்
எவ்வுயிரை ஆன்மனிலும் காண்பன்! யாவற்றிலும் ஒன்றையே காண்பன்

30. எவன் எனை எங்கும் காண்பனோ என்னில் எவற்றையும் காண்பனோ
அவனுக்கு நான் மறைவதில்லை அவனும் எனக்கு மறைவதில்லை

31. ஒருமையில் ஊன்றி, எவ்வுயிரிலும் உறையும் என்னைத் தொழும் யோகி
எங்கிருந்து எது செய்யினும் என்னில் வாழ்கிறான்

32. ஆன்மனோடு ஒப்பிட்டு யாவற்றையும், அவை இன்பமாயிலென் துன்பமாயிலென்,
ஒரு நோக்கொடு பார்க்கும் யோகி மேலோன்

அருச்சுனன் கூறினான்

33. உன்னால் கூறப்பட்ட சமநிலை யோகத்தின்
உறுதி நிலையை அலைதரும் என் உள்ளத்தால்
உணர முடியவில்லை, மதுசூதன!

34. கண்ணா, உளமோ அலைவது, கலங்குவது, அடங்காதது,
காற்றை அடக்குவது போன்றது; அதனை ஒடுக்கல் இயலாதது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகவான் கூறினார்

35. வன்தோளாய் மனம் அடக்கற்கு அரியது அலைவது
என்பதில் ஐயமில்லை
ஆயின் கௌந்தேய பயிற்சியால் மன உறுதியால்
அதைச் செய்யலாம்

36. உள்ளம் ஒடுங்காதார்க்கு யோகம் எய்தற்கரிது
என்பது என் துணிபு
ஆயின் தன்னை வயப்படுத்தி உரியநெறிவழி
முயல்பவனால் அது இயலும்

அருச்சுனன் கூறினான்

37. உள்ள ஓர்ப்புடன் இயைந்தவன் உழைப்பிலாதவனாய்
யோகத்தினின்று விலகிய மனத்தனாய்
யோகசித்தியில் தவறிடில் எக்கதி பெறுவான் கண்ணா

38. வன்தோளாய், பிரமம் நாடும் நெறியில் மயங்கி
நிலை தவறி
இருநெறியும் இழந்து சிதறிய மேகம்போல்
சிதைந்துவிடானா

39. கண்ணா இந்த என் ஐயம் முற்றிலும்
தீர்த்தற்குரியவன் நீ
இது தீர்த்தற்கு உனையன்றி வேறுயாருளர்

பகவான் கூறினார்

40. பார்த்த, அவனுக்கு இம்மையிலும் மறுமையிலும்
அழிவில்லை
நன்று செய்தவன் எவனும் தீ நிலை அடையான்;
உண்மை

41. யோகம் வழுவியவன் புண்ணியர் உலகடைந்து
பல்லாண்டு வாழ்ந்து
நல்லறத்தோர் செல்வர் வீட்டில் மறுபிறவி கொள்வன்

42. இன்றேல் மாண்புலத்து யோகியர் குலத்துதிப்பான்
இத்தகைய ஓர் பிறப்பு மண்ணுலகில் வாய்த்தல்
மிக அரிதே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

43. அவன் அங்கு முற்பிறப்பில் உண்டாய அறிவினை
மீளப் பெறுவன்;
குருநந்தன, அங்கும் அவன் முன்னிலும் மேலாம்
வெற்றி பெற முயல்வன்

44. முற்பயிற்சி அவனை அறியாமலே அவனை யோகத்தில்
ஈர்க்கும்
யோக மெய்யியல் அறிய அவாவுவோனுமே
வேதத்தைக் கடந்தவன்

45. ஆயின் அயராது பயிலும் யோகி மாசு தேய்ந்து
தூயனாய்
பல்பிறவியில் நிறைவுபெற்றுப் பின் எவற்றினும்
உயர்பதம் எய்துவன்

46. யோகி தவத்தோருட் சிறந்தவன் கற்றோரிற் சிறந்தவன்
கருமரில் உயர்ந்தோன், எனவே அருச்சுன,
யோகியாவாய்

47. ஆர்வுடையவனாய் என்னில் ஊன்றிய உள்ளத்தால்
என்னைத் தொழுபவன்
யோகியர் யாவருள்ளும் உயர் யோகி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீமத் பகவத் கீதை

ஏழாம் அத்தியாயம்

பகவான் கூறினார்

1. என்னில் ஊன்றிய மனத்தினாய் என்னைப் புகலடைந்து
யோகம் பயின்று,
ஐயமின்றி என்னை எவ்வாறு முற்றுற அறிவாய் என்பதைக்
கேள் பார்த்தா

2. எதை உணரிற்பின் இங்கு வேறுணர்தற்கில்லையோ
அந்த ஞான விஞ்ஞானத்தை நான் உனக்குப் பகர்வன்

3. ஆயிரம் மனிதருள் நிறைவிற்கு ஒருவன் முயல்வது அரிது
முயலும் சித்தருள் என்னை ஒருவன் உணர்வது அரிது

4. நிலம் நீர் தீ கால் வெளி மனம் புத்தி அகங்காரமென
எண்மடியாகப் பிரிந்துளது என் பிரகிருதி

5. வன் தோளாய் இது என் கீழ் இயற்கை
இதன் வேறாய் உயிர் வடிவாய் எதனால் இவ்வுலகு
தாங்கப்படுகிறதோ அவ்இயற்கையை அறிவாய்

6. எல்லா உயிரும் இவை இரண்டையும் பிறப்பிடமாய்க்
கொண்டவை என்றறிக
எல்லா உலகையும் தோற்றித் துடைப்பவன் நானே

7 தனஞ்சய என்னிலும் உயர்ந்தது ஒன்றில்லை
இழையின் மணிகள் போல் இவை என்னில் கோக்கப்பட்டுள.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. குந்திமகனே, நான், நீரில் சுவை, ஞாயிறு திங்களில் ஒளி
வேதங்களுள் ஓங்காரம் விசும்பில் ஒலி
மனிதருள் ஆண்மை

9. மண்ணில் நன்மணம் தீயில் பேரொளி
எவ்வுயிரிலும் உயிர், தவத்தோரில் தவம்

10. பார்த்தா எவ்வுயிர்க்கும் நான் அனாதிவித்து
அறிவர் அறிவு, ஒளியுடையோர் ஒளி

11. வல்லோருள் ஆசையும் வெளவலுமில்லா
வல்லமையா யுளேன் உயிர்களிடத்தில்
அறந்தவறா ஆசையாயுளேன் பரதரேறே

12. எவை இராசத தாமச சத்துவம் பற்றியவை
என்னிடமிருந்து ஆயவை எனினும்
நான் அவற்றில் இல்லை அவை என்னில் உள்ளவை

13. இம்மும்மை நிலையால் உலகு மோகமுற்றுளது
இவற்றிற்கு அப்பால் பின்னமிலா எனை அறிவதில்லை

14. குணங்களாலாய என்மாயை தெய்விகமானது கடத்தற்கரியது
என்னைப் புகலடைவார் இம்மாயையைக் கடப்பர்

15. தீவினையாளர் மூடர் மாயையால் ஞானம் அற்றோர்
அசுர இயல்பு பூண்டோர் என்னைத் தொழார்

16. பரதரேறே, துன்புற்றார் அறிவுநாடுவார் உயர் ஞானம்
தேடுவார் ஞானியர்
இந்நால்வகை நன்றாற்றுவாரும் என்னைப் பரவுவர்

17. அவர்களுள் யோகத்தில் வழுவாது ஒருவனுக்கே ஆளான
ஞானி சிறந்தோன்
ஞானியர்க்கு நான் மிகப்பிரியன் ஞானியும் எனக்குப்
பிரியன்

18. இவர்கள் உயர்ந்தோர் ஆயினும் ஞானியை நான்
எனவே கருதுவன்
ஏனெனில் யோகம் நிலைத்து நானே உயர்கதி என்றென்னை
அவன் நாடுகிறான்

19. பலபிறவி முடிவில் ஞானி இவையெலாம் வாசுதேவனென்று
எனைவந்தடைவன் இத்தகை விழுமியோனைக் காண்பதரிது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. வெவ்வேறு ஆசையால் உந்தப்பெற்று அறிவழிந்தோர்
வெவ்வேறு தெய்வங்களை அதனதன் முறைகொண்டு
தம்தம் இயற்கையால் கட்டுண்டு வழிபடுவர்

21. யாரெவர் எத்தேவினை ஆர்வுடன் தொழவிரும்பினும்
அவர் ஆர்வினை அசைவிலதாக நான் ஆக்குவன்

22. அவ்வார்வினால் அவன் அவ்வுருவைத் தொழவும்
அவன் தான் அவாவியவை அடைவன் அவற்றை
விதிப்பவன் நானே

23. அச்சிறுமதியுடையார்தம் பலன் எல்லை கொண்டது
தேவரைத் தொழுவார் தேவரை அடைவர்
என் அன்பர் என்னை அடைவர்

24. அறிவிலார் மாறிலாத உயர்வு பிறிதற்ற
என் பெருநிலையை அறியாதவராய்
புலன்படா என்னைப் புலன்படுபவனாகக் கருதுகின்றனர்

25. யோக மாயையால் மூடப்பெற்ற என்னை
எல்லோரும் அறியவரார்
அறிவற்ற இவ்வுலகு இறப்பிலி மாறிலி ஆகிய
என்னை அறிவதில்லை

26. இறந்தனவும் இருப்பனவும் இனி வருவனவுமான
உயிர்களை நான் அறிவேன்
ஆனால் என்னை யாரும் அறியார்

27. பகைகொல்வோய் பாரதா, சினங்காமமெனும்
இருமை மயக்கால்
உயிர்களெல்லாம் பிறப்பிலேயே மயக்க மடைகின்றன

28. ஆயின் தீவினை அழிந்து இருமை மயக்கு நீங்கிய
அறஞ்செய் மாந்தர் தளராத துணிவுடன் என்னைத்
தொழுவர்.

29 என்னைப் புகலடைந்து மூப்புச் சாக்காடினின்றும்
விடுபடுதற்கு முயல்வார்
அதி ஆன்மன் பிரம்மம் கருமம் யாவும் அறிவர்

30. இன்னும் என்னை அதிபூதம் அதிதைவம் அதியஞ்ஞும்
சார்த்தி அறிபவர்
இறக்குங்காலும் சிதையாச் சித்தத்துடன் தொடர்ந்து அறிவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிமத் பகவத் கீதை

எட்டாம் அத்தியாயம்

அருச்சுனன் கூறினான்

1. பெம்ம, பிரமம் யாது அதி ஆன்மன் யாது
கருமம் யாது
அதிபூதம் என்பது யாது அதிதைவம் எனப்படுவது யாது
2. மதுசூதன இங்கு இவ்வுடலில் அதியஞ்ஞும் யார்
அங்கியோரால் சாவேளை எங்ஙனம் நீ அறியப்படுவாய்

பகவான் கூறினார்

3. பிரம்மமே அழிவிலா விழுமம் அதன் இயல்பு
அதியான்மன் எனப்படும்
உயிர்களை ஆக்கலும் நிலைபெறுத்தலுமாகிய வேள்வி
கருமம் எனப்படும்
4. உடல் கொண்டோருள் உயர்ந்தோய்அதிபூதம்
என்பது அழிபொருள்
புருடன் (ஆன்மன்) என்பது அதிதைவம் அதியஞ்ஞும்
என்பது
இங்கு உடலிலுள்ள நானே
5. எவன் இறுதிக் காலத்திலும் என்னையே சிந்தித்து
உடலைவிட்டுச் செல்வனோ
அவன் என் நிலையை அடைகிறான்; இதில் ஐயம் இல்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. எவ்வெவ் நினைவோடு ஒருவன் உடலை இறுதியில்
நீப்பனோ கௌந்தேய
அவ்வாறு நினைத்ததால் இறுதியில்
அதுதையே அவன் அடைவான்

7. ஆகவே என்றும் என்னை நினைந்து
மனம் புத்தி என்னிடம் நேர்ந்து
போரிடு ஐயமின்றி என்னையே அடைவாய்

8. நிலையான இடைவிடா யோகப் பயிற்சியால்
பிறவழிச் செல்லா மனத்தோடும்
பேரொளியாம் பரம்பொருளை நீள நினைப்பவன்
அப்பெருமானை அடைகின்றான்

9-10. முற்றறிஞன் தொல்லோன் அனைத்துமாள்வான்
அணுவிலும் நுணுக்கன்
யாவர்க்கும் ஆதாரம் கருதரிய உருவன்
ஞாயிற்றொளியன் அறியாமை இருட்கு
அப்பாலான் ஆயவனை சாவேளையில்
பக்தி, தளரா உளம் யோக வலுவோடு
புருவ நடுவில் பிராணனை நன்று உறுத்தி
எவன் நீளநினைப்பவன் அவன் அந்த
தெய்வப் பரம்பரனை அடைவன்

11. வேத அறிஞர் எதை அழிவிலது என்பரோ
பற்றறுத்த துறவோர் எதைப் புகல் அடைவரோ
எதை விரும்பிப் பிரம்ம சரியம் கடைப்பிடிக்கின்றனரோ
அந்நிலையைச் சுருக்கமாக நான் உனக்கு உரைப்பேன்

12-13. பொறிவாயில் அவித்து மனதை இதயத்தில் நிறுத்தி
யோக தோரணையில் நிலைத்து 'ஓம்' எனும்
ஓரசை பிரம்ம மந்திரத்தை ஓதியவனாய்
என்னை நினைந்து உடலை நீத்து எவன் செல்லுகின்றானோ
அவன் உயர்கதி அடைவன்

14. சித்தம் வேறின்றி ஓயாது எனை நினைந்து
நாடொறும் ஒன்றிய யோகி
எனை எளிதில் அடைவன் பார்த்தா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. உயர் பெரு நிறைவெய்திய மகான்கள்
என்னை அடைந்து
துன்பத்தின் வைப்பும் நிலையிலாததுமான
மறுபிறப்பை அடையார்

16. அருச்சுன, பிரம்மலோகம் முதலாக எல்லா உலகமும்
மீள்பிறப்புடையன
ஆயின் என்னை அடைந்தபின் மறுபிறப்பு எழுவதில்லை

17. ஆயிரயுகமுடை பிரம்மனின் பகலையும்
ஆயிரயுக முடை பிரம்மனின் இரவையும் அறிந்தவர்
இரவு பகலுணர்ந்தவர்

18. பகல்வர தோன்றா நிலைநின்று தோற்றங்கள்
எல்லாம் வெளியெழும்
இரவுவர தோன்றா நிலை எனப்படுவதில் அவை ஒடுங்கும்

19. அவ்வுயிரீட்டம் மீள மீளப் பிறந்து
இரவுவரவும் தன் செயலின்றி
தோன்றா நிலையில் ஒடுங்கும்

20. ஆயின் அத்தோற்றிலியின் மேலான வேறு இயலதாய்
அழிவிலாத ஓர் தோற்றிலியுளது
இதுமற்றை உயிர்யாவும் அழியும்போதும்
அழிவதில்லை

21. தோற்றிலி அழிவிலி எனப்படுவதே உயர்கதி என்பர்
எதை அடைந்துயிர்கள் மீளவருவதில்லையோ
அது என் உயர்நிலை

22. யாருள் உயிர்கள் உறைவன யார் யாவுளும் பரந்துளர்
அப்பெம்மானை பிறிதுளங் கொள்ளா
பக்தியினால் பெறலாம் பார்த்த

23. எவ்வெக்காலத்தில் யோகிகள் வராதிருக்கச் செல்வர்
வருவதற்குச் செல்வர்
அவ்வக்காலம் பற்றி உனக்கு விளக்குவன் பரதரேறே

24. தீயின்சோதி, பகல், 'வளர்மதி, வடசெலவு ஆறுதிங்கள்
ஆகியவற்றில் செலவு கொள்ளும் பிரம்மஞானி
பிரம்மம் அடைவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25. புகை, இரவு, தேய்மதி தென்செலவு ஆறு திங்கள்
இவற்றில் செலவு கொள் யோகியர் திங்கள் ஒளியடைந்து
திரும்புவர்

26. ஒளி இருள் இருகதி உலகிற்கு நிலையானவை என்பர்
மாந்தர் ஒன்றால் மீளாமை எய்துவர் மற்றதால் மீளுவர்

27. இவ்விருநெறி அறிந்த யோகி ஒரு போதும் ஏமாறான்
எனவே அருச்சுன யோகத்தில் என்றும் ஒன்றியிரு

28. இஃது உணர் யோகி வேதம். வேள்வி தவம்
தானம் தரும் நற்பலன்
யாவும் கடந்து ஒப்பிலா ஆதிபதம் அடைவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிமத் பகவத் கீதை

ஒன்பதாம் அத்தியாயம்

பகவான் கூறினார்

1. எதை அறிந்து தீமையின் நீங்குவையோ
அந்த மறைபொருளியன்ற விஞ்ஞான ஞானத்தை
அழுக்காறற்ற உனக்கு நான் ஓதுவன்

2. இதுவே அரசகலை அரசமறை உத்தமம்
தூய்மை செய்வது நேரில் காணத்தகுவது
அறத்திற் பிறழாதது நோற்றற்கு எளியது
அழியாதது

3. இவ்வறத்தில் மனமூன்றா மாந்தர் எனை அடையாது
இறப்பொடு கூடிய உலக வாழ்வில் மீளப் புகுவர்

4. உலகெலாம் தோற்றிலி நான் பரந்துளேன்
உயிரெலாம் என்னிடம் இருப்புள நான் அவற்றிலிலேன்

5. உயிரெலாம் என்னில் உறைவன அல்ல
என் தெய்விக யோகத்தைப் பார்
என் ஆன்மன் உயிர்களை ஆக்கும் நிலைப்படுத்தும்
ஆயின் அவற்றில் இருப்புக் கொளாது

6. எவ்வாறு என்றும் எங்கும் உலவும் அளப்பரும்
காற்று வானில் நிலையுளதோ
அவ்வாறு உயிரெலாம் என்னில் நிலைகொண்டுள என்றுணர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. கௌந்தேய பூதமெலாம் கற்பமுடிவில் என் பிரகிருதியை
அடையும்
கற்பத் துவக்கத்தில் அவற்றை நான் மீளவெளி
யனுப்புகின்றேன்

8. என்பிரகிருதியை இயங்கச் செய்து
தன்வயமற்று பிரகிருதிவசமுற்ற இவ்வுயிரீட்டத்தை
மீள மீள நான் தோற்றுவிக்கிறேன்

9. தனஞ்சய அக்கருமங்களில் பற்றற்றுப் புறக்கணித்தவன்
போலிருக்கும் என்னை அவை கட்டுப்படுத்தா

10. கௌந்தேய என்கண்காணிப்பால் பிரகிருதி
சராசரங்களைப் பிறப்பிக்கின்றது
இதனால் உலகம் சுழல்கிறது

11. எவ்வுயிர்க்கும் பேரிறையாம் என்னியல்பை அறியாமுடர்
மனித உடம்பில் நான் உறைவது கண்டு அவமதிப்பர்

12. வீண் ஆசையர் வீண் செயலார் வீண் அறிவுடையர்
பிறழ் சித்தர் ஆகியோர் இராட்சத அசுரத்தன்மையை
உடையவரே

13. பார்த்தா, பெருமான்களோ தெய்வப்பண்பு மேற்கொண்டு
பிறழா மனத்தராய் உயிர்முதல், அழிவிலி
என எனை அறிந்து பரவுவர்

14. என்றும் எனைப் பரவித் திட சித்தத்துடன்
முயன்று பத்தியுடன் வணங்கி
என்றும் ஒன்றிய யோகியர் என்னைத் தொழுவர்

15. ஏனை ஞானவேள்வியர் ஞாலமுகமுற்ற
என்னை ஒன்றாய் வெவ்வேறாய் பலவாய்த் தொழுவர்

16. நானே கிரது நானே வேள்வி நானே சுவதா
நானே மருந்து நானே மந்திரம் நானே நெய்
நானே எரி நானே ஓமவினை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. உலகிற்குத் தந்தை தாய் பாட்டன் ஆதாரம்
தூய்மை தருவோன்
உணர்தருவோன் ஓங்காரம் இருக்கு யசுர் சாமம் நானே

18. கதி துணைவன் தலைவன் சாட்சி இருப்பிடம்
சரணம் நண்பன் ஆதி அழிவு அடிநிலை
நிதியம் அழியாவித்து நானே

19. அருச்சுனா காய்பவன் நானே மழைதருவதும் தடுப்பதும் நானே
சா சாகாமை இருப்பு இன்மை எல்லாம் நானே

20. மூவேதமுணர்ந்து வேள்வியால் எனைத் தொழுது
சோமபானத்தால் பாவம் தேய்த்து விண்கதி வேண்டுவர்
புண்ணிய இந்திர உலகுபெற்று விண்ணில்
வானவரின்பம் துய்ப்பர்

21. அவர் அவ் அகல் விண்ணுலகு துய்த்து
புண்ணியம் தேயவும் மண்ணுலகு புகுவர்
இவ்வாறு முத்தருமம் பின்பற்றியோர்
போக மோகங்கொண்டு போவர் வருவர்

22. பிறநாட்டமின்றி எனையே நினைந்து பரவுவர் எவர்
அவ் ஒன்றிய யோகியர் யோகநலம் நான் தாங்குவன்

23. கௌந்தேய எவர் ஆர்வுடன் வேறு தேவரைப் பக்தி
கொண்டு
பரவுவர் அவரும் என்னையே வழுநெறியால்
வழுத்துகின்றனர்

24. வேள்வி யாவிலும் நுகர்வோனும் தலைவனும் நானே
ஆயின் அவர் எனை உண்மையில் அறியார் அதனால்
வழுவுவர்

25. தேவர்த்தொழுவார் தேவரை அடைவர்
பிதிர்த் தொழுவார் பிதிரை அடைவர்
பூதங்கள் தொழுவார் பூதங்களை அடைவர்
என்னைத் தொழுவார் என்னை அடைவர்

26. எவன் பத்தியுடன் பச்சிலை பூ நீர் நேர்ந்திடுவன்
தூய உளத்தன் அவன் இட்ட அதை நான் புசிப்பன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27. கௌந்தேய எதைச் செய்யினும் புசிப்பினும் ஓமிப்பினும்
எதைக் கொடுக்கினும் எது தவஞ்செய்யினும்
அதை எனக்கு நேர்ந்திடுக

28. இவ்வாறு நல்வினை தீவினைக் கட்டுகளினின்றும்
விடுபடுவாய்
விடுபட்டு துறவு யோகத்தில் ஒன்றிய உளத்தனாய்
என்னை அடைவாய்

29. எவ்வுயிர்க்கும் நான் ஒப்பானவன் எனக்கு
இனியர் இன்னாரில்லை அன்புடன் எனைத் தொழுவார்
என்னிலுளர் நான் அவரிலுளேன்

30. தீநெறி மிக்கானுமே சிந்தை வேறின்றி
என்னைத் தொழுவனேல் அவனும் நேரியன்
எனக் கொளற்பாலன் ஏனெனில் அவன்
நன்று துணிந்தனன்

31. விரைவில் அறவோன் ஆவன் அவன்
கௌந்தேய என் பக்தன் நிலையான அமைதி அடைவன்
நலியான் என்பதை உலகிற்குணர்த்து

32. பார்த்த, பெண்கள் வைசியர் அவ்வாறே
சூத்திரர் தாழ்பிறவியருமே என்னைப் புகலடைந்து
உயர்கதி அடைவர்

33. புண்ணிய அந்தணரும் பத்திசேர் அரசமுனிவரும்
பற்றிக் கூறல் வேண்டுமோ
நிலையிலாத நலந்தரா உலகிதைப் பெற்ற நீ
என்னையே பரவுவாயாக

34. என்னில் மனம் நிறுத்தி பக்தி வைத்து
எனக்கு வேள்வி செய்து என்னைத் தொழு
என்னை உயர்கதியெனக் கருதி உள்ளம்
ஒன்றித்து என்னை அடைவாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிமத் பகவத் கீதை

பத்தாம் அத்தியாயம்

பகவான் கூறினார்

1. உன் நலம் விரும்பி நான் கூறும் உயர்மொழியை
மீளவும் கேள் வன்தோளாய் அது உன்னை மகிழ்விக்கும்

2. முனிவர் தேவர் என் முதன்மையை உணர்ந்திலர்
முனிவர் தேவர்க்கு நான் முதற்காரணம் அன்றோ

3. பிறப்பிலி அனாதி உலகிற்குயர் தலைவன் என்றென்னை
எவன் அறிகிறானோ
அவன் மனிதருள் மயக்கம் நீங்கியவனாய் எல்லாப்பாவத்
தினின்றும் விடுதலை பெறுகிறான்

4. புத்தி, ஞானம், மயங்காமை, பொறுமை, வாய்மை,
புலனடக்கம், உளவடக்கம் இன்பதுன்பம்,
பிறப்பிறப்பு, அச்சம் அஞ்சாமை

5. இன்னாமை, ஒப்புரவு, மனவமைவு தவம்
தானம், புகழ் இகழ் இங்கு வெவ்வேறு
நிலைகள் உயிர்கட்கு என்னிலிருந்து ஆவனவாம்

6. ஏழ்முனிவரும் நால்வரும் மனுக்களும்
என்னியல்புடையர் என்மனத்தினின்றும் உதித்தவர்
இவர்களிலிருந்தும் உலகுயிர்கள் தோன்றின

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. எவன் இந்த என் விபூதியை யோகத்தை
உண்மையில் அறிவனோ
அவன் தளரா யோகத்தில் ஒன்றியவன் இதில் ஐயமில்லை

8. நானே அனைத்திற்கும் தோற்றம் என்னிலிருந்தே
யாவும் பெருகும்
என்றுணர்ந்து அறிஞர் என்னையே முழுமனதுடன் தியானித்துத்
தொழுவர்

9. சித்தம் எனக்காய் என்னையே உயிர்நிலையாய்
என்னையே தம் உரையாடற் பொருளாய்
ஒருவர்க்கொருவர் அறிவு கொளுத்தி
அமைவும் இன்பமும் கொள்வர்

10. உள்ளம் ஒன்றி அன்புடன் பரவுவார்க்கு
என்னை அடையும் அந்தப் புத்தியோகம் அளிப்பேன்

11. அவர்மேற் கருணையால் அவர் உளம் உறைந்து
ஞான ஒளியால் அறியாமை இருளை அழிப்பேன்

அருச்சுனன் கூறினான்

12-13. எல்லா முனிவரும் தேவமுனி நாரதர் அசிதர்
தேவலர் வியாசரும் நீ பெரும் பிரம்மம்,
பெரும் உறைபதி, உயர் புனிதம்,
என்றுமுளான், பெருமான், ஓங்கும் ஆதிபகவன்
பிறப்பிலி, முற்றறிந்தவன் எனப் பகர்வர்,
நீயும் அவ்வாறு எனக்குக் கூறுகின்றனை

14. கேசவ நீ எனக்கு உரைப்ப தனைத்தும்
உண்மை என்றுணர்கிறேன்
பகவானே தேவர் தானவர்
உன் தோற்றம் அறிந்திலர்

15. பெருமானே உலகம் உள ஆக்குவாய்
உலகநாயக விண்ணவர் தலைவ மண்பதி
நீ உன்னை உன்னால் அறிகிறாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. உலகம் யாவும் எவ்வெவ் விபூதியால் வியாபித்து
உள்ளனை அவ்விபூதிகளை
எச்சமின்றி எனக்கு உரைப்பாய்

17. யோகி என்றும் உனை நான் எவ்வாறு
ஆழநினைந்து அறியலாம்
பகவானே என்னென்ன இயல்புகளில்
உன்னைநான் சிந்தனை வைக்கலாம்

18. சனார்த்தன, உன்விபூதி யோகம் இரண்டையும்
விரிவாக மீள விளம்புவாய் ஏனெனில் உன்
அமுதமொழியைச் செவிப்பருகும் இன்பம் எனக்குண்டாகும்

பகவான் கூறினார்

19. நன்றாகுக குருகுலப் பெரும என்
திவ்விய விபூதிகளுள் சிறந்தவற்றை உனக்குரைப்பேன்
என் விபூதிகளின் விரிவுக்கு எல்லை இல்லை.

20. அர்ச்சுனா உயிர்கள் எல்லாவற்றினது இதயம்
உறையும் ஆன்மன் நானே உயிர்களின்
ஆதிநடு அந்தம் எல்லாம் நானே

21. ஆதித்தருள் விட்டுணு நான் ஒளிர்பொருள்களுள்
கதிரவன் நான் மருத்துக்களுள் மரீசி நான்
உடுக்களுள் திங்கள்நான்

22. வேதங்களுள் சாமம் நான் தேவருள் இந்திரன் நான்
இந்தியங்களுள் மனம் நான் உயிர்களிடம் அறிவு நான்

23. உருத்திரருள் சங்கரன் நான் இயக்கர் அரக்கருள்
குபேரன் நான் வசுக்களுள் எரி நான்
சிகரிகளுள் மேரு நான்

24. பார்த்த புரோகிதருள் முக்கிய பிருககபதிநான்
சேனாதிபதியருள் முருகன் நான்
நீர்நிலைகளுள் கடல்நான்

25. பெருமுனிவருள் பிருகுநான் சொற்களுள் ஓரெழுத்து
ஓங்காரம் நான் வேள்விகளுள் செபவேள்வி நான்
அசைவிலிகளுள் இமயம் நான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. மரங்களுள் அரசுநான் தேவமுனிவர்களுள் நாரதன்
கந்தர்வருள் சித்திரரதன் சித்தருள் கபில முனிநான்

27. குதிரைகளுள் அமுதுடன் பிறந்த உச்சைச்சிரவசு நான்
சிறந்த யானைகளுள் ஐராவதம் நான்
மனிதர்களுள் அரசன் நான் என அறி

28. ஆயுதங்களுள் வச்சிராயுதம் நான் பசுக்களுள்
காமதேனு நான் பிறவி எடுப்போருள் மன்மதன்
நான் பாம்புகளுள் வாசுகி யான்

29. நாகங்களுள் அனந்தன்நான் நீர்த்தெய்வங்களுள்
வருணன் நான் மூதாதையருள் அரியமான் நான்
கட்டியாள் பவருள் காலன் நான்

30. திதிகுலத்தாருள் பிரகலாதன் கணிப்பாருள்
காலம் விலங்குகளுள் சிங்கம்
பறவைகளுள் கருடன் நான்

31. தூய்மை செய்வனவற்றுள் காற்று, ஆயுதம் ஏந்தியவருள்
இராமன், மீன்களுள் மகரம் ஆறுகளுள் கங்கை நான்

32. அருச்சுன படைத்தவற்றுள் ஆதிநடு அந்தம் யான்
விஞ்ஞானங்களுள் ஆத்ம விஞ்ஞானம் நான்
தருக்கிகர்க்குள் பகுத்தறிவு நான்

33. எழுத்துக்களுள் அகரம் நான் சொற்சேர்க்கைகளுள்
இரட்டைநான் வற்றாத காலம் நான்
திசை யெலாம் முகம் கொண்டு
முறை வழங்குவோன் நான்

34. அனைத்தையும் கவரும் சா நான்
ஆனவற்றின் ஆதியும் நானே பெண்மையில்
புகழ், நினைவு, திரு, வாக்கு, பொறை
உறுதி நுண்புலம் நான்

35. சாமகானத்தில் பிருகத் சாமன்
சந்தங்களில் காயத்திரி, மாதங்களுள் மார்கழி
பருவங்களில் வேனில் நான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

36. வஞ்சகரின் சூதாட்டம் நான் சால்பு ஒளி உடையாரின்
ஒளிநான் வெற்றிநான் ஆள்வினைநான்
சாத்துவிகரின் சாத்துவிகம் நான்

37. விருணியருள் வாசுதேவன்நான் பாண்டவருள்
தனஞ்செயன் முனிவருள் வியாசர்
கவிகளுள் உசனர் நான்

38. கட்டியாள்பவரில் கட்டாண்மை நான்
வெற்றி வேண்டுவாரிடத்து நீதிநான்
மறைபொருள்களில் நான் மௌனம்
ஞானியர் ஞானம் நான்

39. எவ்வுயிர்க்கும் எது வித்தோ அதுவும் நானே
அசைவன அசையாதனவற்றுள் நானிலாது
எதுவும் இல்லை

40. பரந்தப என் தெய்வீக விபூதிகட்கு எல்லை இல்லை
என் பரந்த விபூதிகளுட் சிலவே இங்கு கூறப்பட்டன

41. எது எது விபூதிசேர் திரு உளதோ ஆற்றல் உளதோ
அது என் சால்பு ஒளியின் ஓர் பகுதியின்
தோற்றம் என அறிக

42. இவ்விவரம் எலாம் அறிந்து உனக்காம் பலன்
என்ன அருச்சுன
என் ஓர் பண்பினால் இவ்வுலகெலாம் நான்
தாங்கியுளேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிமத் பகவத் கீதை

பதினொராவது அத்தியாயம்

அருச்சுனன் கூறினான்

1. எனக்கருள்செய ஆன்மனை நன்கு விளக்கும்
மறைமிகுமொழி உரைத்தனை அதனால்
என் மயக்கம் ஒழிந்தது

2. தாமரைக் கண்ணா உயிர்களின் தோற்றமும்
மறைவும் உன்னிடமிருந்து விரிவாக அறிந்தேன்
அழிவிலாத உன் ஆற்றலும் அறிந்தேன்

3. பேரிறைவா எவ்வணம் நீ உனை வண்ணித்தாய்
அவ்வணமே நீயுளாய் எனினும் உன்
இறைவடிவம் காண இச்சை கொண்டேன் பெரும

4. பெருமானே என்னால் அவ்வடிவைக் காண
இயலுமென எண்ணுவிரேல் யோகேசுவர
அழிவிலா உன் வடிவை அடியேற்குக் காட்டியருள்

பகவான் கூறினார்

5. பார்த்த என் பல்வண்ணப் பல்வடிவப் பல்வகைய
உருவங்களை நூற்றளவில் ஆயிரம் ஆயிரம்
அளவில் இனிப்பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. பாரத, ஆதித்தர் வசுக்கள் உருத்திரர்,
அசுவினியரிருவர், மருத்துக்கள், முன்கண்டறியா
அற்புதங்கள் பலவற்றைப் பார்

7. அர்ச்சுன இங்கென் உடலில் ஈண்டிய
அசைவுள அசைவில் உலகு யாவையும்
மேலும் வேறு பார்க்க விரும்பும் எதையும் பார்

8. உன் கண்களால் எனைக் காண உன்னால்
இயலாது தெய்வக்கண் அளிக்கிறேன்
என் இறைமை யோகத்தைப் பார்

சஞ்சயன் கூறினான்

9. அரசே யோக இறையான அரி இவ்வாறு கூறிப்
பின் பார்த்தற்குத் தன் பரமேசுவர உருவைக் காட்டினார்

10. பல் முகமும் பல்கண்ணும் பல் அற்புதக் காட்சியும்
கொண்டு அவ்வடிவம்
திவ்வியப் பல அணியும் பல்லாயுதமும் ஏந்தி நின்றது

11. திவ்விய மாலை ஆடைகள் அணிந்து திவ்வியகந்தம்பூசியதாய்
முற்றும் வியப்புடையதாய் ஒளிர்விடுவதாய்
அளப்பரிதாய் எங்கும் முகமுளதாய்த் தோன்றியது

12. ஆயிரம் ஞாயிற்று ஒளி ஒன்றி வானில் உதிப்பின்
அது அப்பெருமான் பேரொளிக்கு ஒப்பாகும்.

13. அப்போது பாண்டவன் ஆங்கே தேவதேவன் உடலில்
பல்கூறாய்ப் பகுபட்ட உலகனைத்தும்
ஒன்றாக நின்றதைக் கண்டனன்

14. பின் தனஞ்சயன் பெருவியப்புற்று மயிர்க்கூச்சலுற்று
தேவனைத் தலைவணங்கி கைகுவித்துக் கூறுவான்

அருச்சுனன் கூறினான்:

15. தேவ உன் உடலில் தேவரைப் பல்லுயிர்த் தொகையைத்
தாமரை அமரும் பிரமனை முனிவரை தெய்வநாகங்களைக்
காண்கிறேன்

16. உலகிற்கிறையே பலபுய வயிறுவாய் கண்ணும்
எல்லையில் உருவமுள்ள உன்னை எங்கும் நான்
காண்கின்றேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் ஆதிநடு அந்தம் ஒன்றும் கண்டிலேன்

17. முடி கதை அழி ஏந்தி நோக்கரிய எங்கும் ஒளிர்பிழம்பாகி
நாவிடு எரி ஞாயிறு போல் ஒளிரும்
அளப்பரிய உன்னைச் சூழ்வரக் காண்கிறேன்

18. அழிவிலைநீ அறிதற்குரிய பரம்நீ இவ்வுலகின்
பெருவைப்புநீ மாறிலிநீ என்றுமுள அறக்
காவலன்நீ ஆதிபகவன் நீ

19. ஆதிநடு அந்தமிலாய் எல்லையில் ஆற்றலாய்
எண்ணிலி புயத்தாய் ஞாயிறு திங்கள் கண்களுளாய்
ஒளிர் எரி வாயாய் உன் ஒளியால்
உலகு காய்வாய் உனை நான் காண்கிறேன்

20. வான் மண்ணிடை வெளியெலாம் நீயே நிறைந்தனை
பயந்தரும் நின்வியப்புறு வடிவம் கண்டு
முவுலகும் அஞ்சி நடுங்கும் பெரும

21. தேவர்குழாம் உன்னிடம் புகுகின்றனர்
அஞ்சியவராய்ச் சிலர் கைகுவித்துன்னைத்
துதிக்கின்றனர் சித்தர் முனிகணம் வாழி என்று
உனைச் செம்மொழியால் பரவுகின்றனர்

22. உருத்திரர் ஆதித்தர் வசுக்கள் சாத்தியர்
விசுவதவர் அசுவினியர் மருத்துகள் ஊசுமபர்
கந்தருவர் யட்சர் அசுரர் சித்தர் முதலியோர்
உன்னைப் பார்த்து வியப்புற்றனர்

23. தடந்தோளாய் பல்முகமும் கண்களும்
பல்தோள் தொடை பாகங்களும்
பல்வயிறு தெற்றிப் பற்பயங்கரமும்
பார்த்துலகங்கள் பயத்தால் திகைத்தன
நானும் அவ்வாறே

24. விண்ணுவே விண்தொட்டு ஒளிவீசும் பல்
வண்ணத்தாய் திறந்த வாயாய் அகல்
கனல் கண்ணாய் உனைக்கண்டு என்னுளம்
நடுங்கும் அமைதியை வலிமையைக் கண்டிலேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25. அமரர் இறையே தெற்றிப்பல் நிறைந்த
ஊழித்தீ அனைய உன் வாய்களைக்
காணவும் திக்குத் திசை காணேன்
மன அமைதியும் காணேன் உலகின் உறைவிடமே
அமரர் கோவே அருள் செய்வாய்

26. உலக மன்னர் கூட்டமும் திருதராட்டிரர் மக்களும்
வீட்டுமர் துரோணர் சுதபுத்திரர் அவர்களும்
எம்படை வீரரும்

27. உன் பயங்கர கோரப்பல்லுடை வாயினுள்
விரைந்து புகுவர் பல்லிடை வெளிகளில்
சிக்கிச் சிரம் நொறுங்கித் தூளாகிச் சிலர்
காணப்படுவர்

28. எவ்வண்ணம் பெருநீர் ஆறுகள் பல மாகடல்நாடி
ஓடுமோ
அவ்வண்ணம் உலக மானுட வீரர்கள் அச்சம் தந்து
ஒளிர்விடும் உன்வாயினுள் புகுகின்றனர்

29. விட்டில்கள் நாசமடைய மிகுவிரைவுடன் வெந்தழல்
வீழ்வதுபோல்
உயிர்களெல்லாம் நாசமடைய உன்வாய்களுள்
பாய்கின்றன

30. வெந்தழல் வீசும் வாய்களால் உலகனைத்தும்
விழுங்கி எத்திசையும் நாவால் நக்குகிறாய்
இறைவா, உன் கடும் கதிர்கள் யாவும்
கனலால் உலகனைத்தையும் எரிக்கின்றன

31. அச்சந்தரு உருவுடையோய் நீ யார் எனக் கூறு
உன்தாள் பணிகிறேன் தேவருள் சிறந்தோய்
அருள்புரி
ஆதியாம் உன்னை அறிய விழைகின்றேன் உன்
செயலை நான் விளங்கிலேன்

பகவான் கூறினார்

32. உலகழிக்கும் வல்ல காலமாக நான் உளேன்
உலகம் ஒடுக்குதற்கு நான் இங்கு உற்றனன்
நீ இல்லாமலே எதிரியர் படையிற் குழுமியோர்
யாவரும் தொடர்ந்து வாழார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

33. எனவே எழுந்திரு புகழை ஈட்டு பகைவரைவென்று
செல்வ நாட்டினைத் துய்ப்பாய்
இவர்கள் முன்பே என்னால் கொல்லப்பட்டவர்
இடது கை வில்லி, நீ நிமித்த மாத்திரமாகவே இரு

34. என்னால் கொலையுற்ற துரோணர் வீட்டுமர்
சயத்திரன் கர்ணன் மற்றை வீரர் இவர்களை
நீ மீளக் கொல்வாய் அஞ்சி வருந்தாதே
போரில் எதிரியரை வெல்வோய் போர் புரி

சஞ்சயன் கூறினான்

35. கேசவன் மொழிஇது கேட்டு நடுங்கிய அருச்சுனன்
கைகூப்பித் தொழுது அச்சம் மேலிட வணங்கிக்
குரல் அடைத்துக் கண்ணனுக்கு இது கூறுவான்

36. கண்ணா உன்புகழ்கேட்டு உலகு மகிழும் இன்புறும்
அரக்கர் கூட்டம் அச்சுற்று அங்குமிங்கும் ஓடும்
சித்தர் கணம் வணங்கும் இது பொருத்தமே

37. அளவிலாய் அமரர்கோவே பெருமானே
ஞாலத்துறை பதியே, பிரமற்கும் பெரியோய்
முதற்காரணத்தாய், அவரேன் உனை வணங்கார்?
உண்மையுமாய் இன்மையுமாய் அழிவிலாது
அப்பாலும் உள்ளவனு நீயலவோ

38. எல்லையில் உருவுடையோய் எல்லையுமானாய் ஆதிதேவ
தொல்லோய் ஞாலத்தின் பெருவைப்பே ஞாலம்
நிறை பொருளே
அறிவனும் அறிபொருளுமானாய்

39. நீயே எரி வளி இயமன் வருணன் திங்கள்
பிரசாபதி பிரமன்தந்தை மீள மீள வணக்கம்
ஆயிரம் ஆயிரம் மேலும் கோடி வணக்கம்

40. அனைத்து மாவாய் முன்னும் பின்னும்
எல்லாத் திசையிலும் உனக்கு வணக்கம்
அளப்பரும் வீரமும் வலுவுமுடையாய்
எங்கும் நிறைந்தாய் ஆகவே எல்லாமானாய்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org
University of Peradeniya
29 DEC 2021

41-42. உன் மேன்மை ஞாலப்பேருரு அறியா நான்
கவனக்குறைவால் அன்பின் கெழுமையால்
நண்பன் என நினைந்து ஏ கண்ணா ஏ யாதாவா
ஏ நண்பா என்று துடுக்கில் இயம்பியிருப்பேன்
கண்ணா விளையாட்டில் படுக்கையில் உண்கையில்
தனித்தோ பிறருடன் கூடியோ இருக்கையில்
வேடிக்கைக்காக உனை அவமதித்திருப்பேன்
என்னை மன்னித்தருள்

43. ஒப்பிலா மேன்மையாய் இந்த அசையும் அசையா
உலகிற்குத் தந்தைநீ வணக்கத்திற்குரியன் நீ
தலயாய குருநீ மூவுலகிலும் உவமம் கடந்தவன் நீ
உன்னை மிக்கார் யாருளர்?

44. தேவா நான் என் உடல்தாழ்த்தி வணங்கி
தொழுதற்குரிய இறை உனை வேண்டுகின்றேன்
சேய் பிழையைத் தந்தைபோலும் தோழன் பிழையைத்
தோழன் போலும் காதலி பிழையைக்
காதலன் போலும் பொறுத்தருள்

45. முன்காணாததைக் கண்டு உவகை கொண்டேன்
என் மனம் கலங்கியுளது உன் இயற்கை வடிவை
எனக்குக் காட்டு அமரர் பதியே
உலகின் உறைபதியே அருள்புரிவாய்

46. ஆயிரந்தோளாய் ஞாலப்பேருருவே உனை நான்
முடிபூண்ட ஆழிக்கையினனாகக் காண அவாவுகின்றேன்
நான்கு கைகளுடன் அதே உருவங் கொள்வாய்

பகவான் கூறினார்

47. அர்ச்சுன அன்பினால் என் யோகபலனால்
அளப்பரிய ஒளிர்மிகு வரையிலா மேன்மைகொள்
முன் எவரும் கண்டிலா என் உயர் ஞாலக்கோலம்
காட்டினேன்

48. குருகுலத்து அரும்வீர உன்னைத் தவிர எவரும்
மண்ணுலகில் வேதமோதல், தானம் தவம் கிரியை,
எவற்றாலும் என்னை இவ்வுருவில் காணலரிது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

49. என் இக்கோர உருக்கண்டு அஞ்சற்க கலங்கற்க
அச்சம் தவிர்த்து மகிழ்வுற்று இந்த என் முன்
உருவினைப்பார்

சஞ்சயன் கூறினான்

50. வாசுதேவன் அருச்சுனற்கு இவ்வாறு கூறி
மீண்டும் தன் உருவம் காட்டியருளினன்
பெரியோன் மீளத் தன் இன்னுருக் கொண்டு
அச்சுற்ற அருச்சுனற்கு ஆறுதல் கூறினன்

அருச்சுனன் கூறினான்

51. கண்ணா இந்த உன் இனிய மனித உருக்கண்டு
உளம் தெளிந்தேன் இயல்பான உணர்வும்பெற்றேன்

பகவான் கூறினார்

52. காணரிய என் இவ்வுருவை நீ கண்ணுற்றாய்
தேவரும் இதைக் காண எப்போதும் அவாவுவர்

53. எவ்வாறு நீ என்னைக் கண்டனை அவ்வாறு என்னை
வேதம் தவம் தானம் வேள்வி ஆகியவற்றாலும்
காண முடியாது

54. பகைகொல்வாய் அருச்சுன பிறநோக்கிலா
அன்பினால், என்னை அறிதலும் காணலும்
அளவளாவி அடைதலும் கூடும்

55. பாண்டவா என்பணிசெய்து எனைப்பரம் எனக்
கொண்டு என்னில் பக்தி பூண்டு
பற்றற்று எவ்வுயிரிலும் பகையற்றிருப்பவன்
என்னை அடைகின்றான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிமத் பகவத் கீதை

பன்னிரண்டாம் அத்தியாயம்

அருச்சுனன் கூறினான்

1. என்றும் ஒன்றிய மனத்தினராய் நன்குனைத் தொழுவார்
புலன்படாத அழிவிலித் தொழுவார் இருவருள் எவர்
நல் யோக அறிஞர்

பகவான் கூறினார்

2. என்னில் நிலைபெற மனம் வைத்து உயர்சிரத்தை யொடு
எவர் எனைத் தொழுவரோ அவர் யோகம் நன்குணர்ந்தவர்
என்பதென் கருத்து

3-4. எங்கும் ஒரு மனநிலையாய் இந்தியக் கூட்டம் நன்கடக்கி
சொல்லில் அகப்படாததாய் புலன் கடந்ததாய்
எங்கும் நிறைந்ததாய் சிந்தைக்கு எட்டாததாய்
அசைவிலியாய் மாறிலியாய் அழிவிலியாய் உள்ளதை
எவர் நன்கு நீள நினைப்பரோ, எல்லோரும் இன்புற்றிருக்க
எண்ணுவரோ அவர் என்னை வந்தடைவர்

5. புலங்கடந்த பொருளில் சிந்தை வைத்தவர் சிரமம் பெரிது
புலங்கடந்த பொருளை உடல்கொண்டார் அடைவது கடினம்

6. ஆயின் எவர் கருமம் யாவையும் என்னில் துறந்து
என்னைப் பரமென எண்ணிப் புறம்தவிர் யோகத்தால்
என்னை நீள நினைந்து தொழுவரோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. அவ்வாறு என்னில் நிலைத்த சித்தத்தாரை
சாசேர் வாழ்வுப் பெருங்கடலினின்று
விரைவில் நான் கரையேற்றுவேன் அருச்சுனா

8. என்னிலேயே மனத்தை நிறுத்து
என்னில் புத்தியைப் பொருத்து
பின்னர் என்னிலேயே உறைவாய் ஐயமில்லை

9. அருச்சுன உறுதியாக உன் சித்தத்தை என்னில்
நிறுத்த ஆற்றல் இல்லையேல் பயிற்சி
யோகத்தால் என்னை அடைய முயல்வாய்

10. பயிற்சியிலும் திறமை இலையெனில்
என் பொருட்டுக் கருமம்செய் என்பொருட்டுக்
கருமம் செய்வதாலும் வெற்றி அடைவாய்

11. இதை ஏனும் செய ஆற்றல் இலைஎனின்
எனைச் சரண்புகுந்து அடங்கிய உளத்தனாய்
கரும பயன் யாவையும் என்னில் ஒப்படை

12. பயிலலில் ஞானமும் ஞானத்தில் தியானமும்
தியானத்தில் கரும பலத் துறவும் சிறந்தன
துறவு விரைவில் சாந்தி தரும்

13-14. எவ்வுயிர்க்கும் வகையின்றி நட்புடையனாய்
கருணை உளத்தனாய் நான் எனது அற்றவனாய்
இன்ப துன்பத்தை ஒரு நிலையாய்க் கொள்பவனாய்
பொறுமையும் என்றும் உவகையு முள்ளவனாய்
யோக நாடியாய் அடங்கிய உளத்தனாய்
திட உறுதியனாய் என்னில் மனம் புத்தி ஒப்பித்தவனாய்
என் பத்தனாய் எவன் உளன் அவன் எனக்குப் பிரியன்

15. எவனால் உலகு துன்புறுவதில்லை உலகால் எவன்
துன்புறுவதில்லை எவன் அச்சம் சினம் உவகை
மனக்கிளர்வுகளினின்றும் விடுபட்டவனோ
அவன் எனக்குப் பிரியன்

16. வேண்டுமையிலாதானாய் திறனாளனாய்
ஒருபாற் கோடாதவனாய் கவலையிலாதானாய்
ஒன்றும் மேற்கொளாதவனாய்
என் பக்தனாய் எவன் உளனோ
அவன் எனக்குப் பிரியன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. எவன் மகிழான் வெறுக்கான், துயருறான்
விருப்புறான், நல்லவை அல்லவைக் கருமங்கள்
துறந்தானோ, பக்திமானோ அவன் எனக்குப் பிரியன்

18. பகைவன் நண்பன் இருவரிடத்தும் ஒரு நிலையானவன்
மானம் அவமானம் இரண்டிலும் அவ்வாறானவன்
தட்பவெப்பத்தில் சுகதுக்கத்தில் சமமானவன், பற்றற்றவன்

19. இகழ்புகழ் இரண்டும் ஒன்றென்பான், மௌனி
எதிலும் திருப்தி கொள்வோன், உறைவிடமிலான்
கலங்கா மனத்தன் பக்திமான் எவன்
அவன் எனக்குப் பிரியன்

20. எவர் சிரத்தையுடையராய் எனைப்பரம் எனக் கொண்டு
பக்தர்களாய் தருமம் பிழையா இந்நெறியை
இங்குரைத்தவாறு கடைப்பிடிப்பரோ
அவர் எனக்குப் பிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிமத் பகவத் கீதை

பதின்மூன்றாம் அத்தியாயம்

அருச்சுனன் கூறினான்

கேசவா, பிரகிருதியையும் புருஷனையும் சேத்திரத்தையும் சேத்திரஞ்ஞனையும் பற்றி அறியவும் ஞானத்தைப் பெறவும் நான் விரும்புகின்றேன்.

பகவான் கூறினார்

1. இந்த உடல் சேத்திரம் எனப்படும். இதை உணர்ந்தவனை சேத்திரஞ்ஞன் என்று அறிஞர் கூறுவர்

2. அருச்சுன, எல்லாச் சேத்திரங்களிலும் என்னைச் சேத்திரஞ்ஞனாக அறி, சேத்திரம் சேத்திரஞ்ஞன் பற்றிய அறிவு எது அதுவே ஞானம் என்பது என் கருத்து

3. அச்சேத்திரம் எது எவ்வகையது என்ன மாற்றமுடையது எங்கிருந்து அது ஆனது, சேத்திரஞ்ஞன் யார் எத்திறத்தவன் என்பவற்றைச் சுருக்கமாக என்னிடம் கேள்.

4. முனிவர் இதனைப் பலவாறு பல்வேறு பாடல் வகையில் சிறப்புடன் உறுதிப்பட பிரமனைச் சுட்டும் ஓது மொழியில் பாடியுள்ளனர்

5-6. பெரும் பூதங்கள், அகங்காரம், புத்தி, புலன்படாதது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதினோர் இந்தியங்கள், ஐந்து இந்தியப் பொருள்கள்
விருப்பு வெறுப்பு இன்பதுன்பம், தொகுப்பு உடல்,
உயிர் பொறுதி எனும் இத்தொகுதி, மாற்றங்களுடன்
சேத்திரம் எனச் சுருக்கமாகக் கூறப்படும்.

7. பணிவு, அடக்கம், பொறுமை, நேர்மை குருவின் பணி
தூய்மை, தளராமை, தன்னாட்சி

8. இந்தியப் பொருளில் விருப்பின்மை, செரு,
பிறப்பு இறப்பு மூப்பு நோய் துன்பம் இவற்றிலுள
தீமைகளை உணர்தல்

9. மக்கள் மனை வீடு மீது பற்றின்மை பெருமிதமின்மை
விரும்பியது விரும்பாதது கிட்டும்போது என்றும்
ஒரே சித்தம்

10. என்னில் புறஞ்சேரா யோகத்தால் நெறிபிழையா பக்தி,
தனியிடத்து நாட்டம், சனக்கூட்டத்தில் வெறுப்பு

11. ஆன்மஞானக் கடைப்பிடி, உண்மைப்பொருள் ஆய்வு,
இவை ஞானம்; இதற்குப் புறம்பானது
அஞ்ஞானம்

12. அறியத்தகுவது எது அதை அறிந்து சாகாமை எய்துவன்
ஒருவன், அதை நான் மொழிவன், அது ஆதியிலாப்
பரப்பிரம்மம்; அது உளது இலது என ஒண்ணாதது.

13. அது எங்கும் கைகால் எங்கும் கண்தலைவாய் எங்கும்
காதுகளை உடையது; அது உலகெங்கும் நிறைந்தது.

14. இந்திய குணங்களால் விளங்குவது, இந்தியங்கள் அற்றது,
பற்றற்றது எனினும் அனைத்தையும் தாங்குவது
குணங்களற்றது ஆயின் அவற்றைத் துய்ப்பது.

15. அது பொருள்கட்கு உள்ளும் புறமும் உள்ளது;
அசைவிலி, அசைவுளி; நுண்மையானதால்
அறிதற்கரியது; அண்மையது சேய்மையது

16. பிரிவிலி ஆயினும் பொருள்களில் பிரிவுளிபோல்
நிற்பது; பொருள்களைத் தாங்குவது எனப்படும்
அவற்றை விழுங்கித் தோற்றுவிப்பதும் அதுவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. ஒளிகட்கு ஒளியாய் அது இருளைக் கடந்தது
அறிவாய் அறிதக்கதாய் அறிவால் அடை பொருளாய்
எல்லோர் இதயத்திலும் உறைவது.

18. இங்ஙனம் சேத்திரம், ஞானம், ஞேயம் சுருக்கமாய்
உரைக்கப்பட்டது, இதை நன்குணரும் என்பத்தன்
என் நிலைமைக்கு ஏற்றவனாவன்.

19. பிரகிருதி புருடன் இரண்டும் அனாதி என அறிக
பிரகிருதியிலிருந்தே மாற்றங்கள் குணங்கள்
பிறந்ததும் அறிக

20. காரண காரியத் தோற்றுவாய் பிரகிருதியாம்
இன்பதுன்பம் துய்ப்பதற்கு ஏது புருடன்

21. புருடன் பிரகிருதியில் நின்று பிரகிருதி ஈனும்
குணங்களைப் புசிக்கிறான்; குணப்பற்றே
நல்ல அல்ல பிறப்பிற்கு ஏதுவாம்.

22. இவ்வுடலின் வேறாக உள்ள புருடன் அறிவுக்கறிவாய்
புத்திக்குப் புத்தியாய் உள்ளவன், தாங்குவோன்,
பேரிறைவன், பரமன்

23. இவ்வாறு புருடனையும் குணங்கள் கூடிய பிரகிருதி
யையும் உணர்வான் எவன், அவன் எந்நெறி
நிற்பினும் மீண்டும் பிறப்பதில்லை.

24. சிலர் தியானத்தால் உள்ளத்தில் தாமே ஆன்மனைக்
காண்பர் சிலர் ஞான யோகத்தாலும்
சிலர் கரும யோகத்தாலும் காண்பர்

25. வேறு சிலர் அவ்வாறு அறியாராயினும்
பிறர் சொலக் கேட்டுத் தொழுவர்; கேள்வி பெருங்கதி
யெனக் கருதி ஒழுகின் அவரும் மரணத்தைக் கடப்பர்.

26. பரதரேறே அசைவிலி அசைவுளி எது உளது
அது சேத்திரம் சேத்திரஞ்ஞன் சேர்க்கையால்
என அறிக

27. எவ்வுயிரும் ஒத்து நிலை கொண்டவனும் அழிவுளிகளில்
அழிவிலாதவனுமான பேரிறையை எவன் காண்கிறான்
அவனே காண்பவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28. எங்கும் ஒத்துநிலைக்கும் இறையைக் கண்டு
தன்னைத் தன்னால் அழியாதான் உயர்கதி
எய்துகின்றான்.

29. கருமம் யாவும் பிரகிருதியின் செயல்
ஆன்மன் செயலற்றது என்று எவன் காண்கிறான்
அவனே காண்பான்

30. உயிர்களின் தனித்தனி வாழ்வு ஒன்றில்
உறைவதையும் அதிலிருந்து அவை விரிவதையும்
காண்பவன் பிரம்மமாகின்றான்.

31. அருச்சுன், அனாதி குணமிலி ஆதலால்
கேடிலா இவ்விழுப்பொருள் உடலில் உறைவதாயினும்
செயலிலாதது பாதிப்பிலாதது.

32. எவ்வாறு எங்கும் நிறை ஆகாயம் அதன் நுண்மையால்
மாசுறுவதில்லையோ அவ்வாறு உடல் நிறையும்
ஆன்மன் மாசுறுவதில்லை

33. அருச்சுன, எவ்வாறு ஒரே ஞாயிறு உலகெலாம் ஒளிர்க்குமோ
அவ்வாறு சேத்திரன் சேத்திரம் அனைத்தையும் ஒளிர்ப்பான்.

34. சேத்திரம் சேத்திரஞ்ஞன் வேற்றுமையையும்
பிரகிருதியினின்றும் உயிர்கள் விடுதலை பெறலையும்
ஞானக் கண்ணால் காண்பவர் பரநிலை எய்துவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிமத் பகவத் கீதை

பதினான்காம் அத்தியாயம்

பகவான் கூறினார்

1. எதை அறிந்து எல்லா முனிவரும் இதன்பின்
உயர்நிலை அடைந்தனரோ; ஞானங்களுள்
உயர்ஞானமதை மீளநான் இங்குரைப்பன்

2. இஞ்ஞானத்தில் புகலடைந்து என்னொத்த
பண்படைந்தார், படைப்பின்போது பிறப்பதுமில்லை
பிரளயத்தால் பாதிப்புறுவதுமில்லை.

3. அருச்சுன என் கருப்பை மகாப்பிரம்மம்
அதில் நான் கருப்பத்தை வைக்கிறேன். அதிலிருந்து
எல்லா உயிர்களும் தோன்றுகின்றன.

4. அருச்சுன எக்கருப்பையில் எவ்வுரு பிறப்பினும்
அவற்றிற்குப் பெரும் பிரகிருதியே பிறப்பிடம்
நான் கரு அளிக்கும் தந்தை

5. தடந்தோளா, பிரகிருதியில் தோன்றிய
சத்துவம் இராசதம் தாமசம் குணங்கள்
தேகத்தில் அழிவிலாத் தேகியைப் பிணிக்கின்றன.

6. பாவமிலாய், அவற்றுள் சத்துவம் ஒளியுடையது
மாசற்றது இடரளியாதது, இன்ப ஞானப்
பற்றுக்களால் பிணிப்பது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. கௌந்தேய இராசதம் ஆசை வடிவினது
வேட்கை பற்று விளைப்பது என அறிக
அது கருமப்பற்றால் தேகியைக் கட்டுவது

8. அருச்சுன தமசோ அஞ்ஞானத்தால் விளைவது
தேகிகட்கு மயக்கம் அளிப்பது என அறிக
அதுமன மடி சோம்பல் துயில் இவற்றால் பிணிப்பது

9. பாரத சத்துவம் இன்பத்திலும் இராசதம்
கருமத்திலும் பொருத்தும் தமசோ ஞானத்தை
மறைத்து மனமடியில் பொருத்தும்

10. பாரத, இராசதம் தமசை அடக்கி சத்துவமும்
சத்துவம் தமசை அடக்கி இராசதமும்
சத்துவம் இராசதத்தை அடக்கித் தமசும் மேலெழும்

11. எப்போது இவ்வுடலின் வாயில்வழி அனைத்தாலும்
ஞான ஒளி எழுகின்றதோ அப்போது
சத்துவம் மேலோங்கியது என அறிக

12. பரதரேறே பேராசை, புலன்விரிவு, வினை, அடங்காமை,
விருப்பு இவை இராசதம் மேலிட ஆவவை

13. குருநந்தன, ஒளியின்மை, முயல்வின்மை மதிமடி,
மயக்கம் இவை தமசு மேலிடப் பிறப்பவை

14. சத்துவம் மேலான நிலையில் தேகி இறப்பின்
உயர்ஞானியர்க்குரிய மாசில் உலகங்களை அடைவன்

15. இராசதம் உயர இறப்பவன் கருமப்பற்றுடையாரிடைப்
பிறப்பான்; அவ்வாறே தமசில் இறந்தவன்
அறிவிலார் கருப்பையில் பிறப்பன்.

16. நற்கருமப்பலன் சாத்துவிகம் தூய்மை என்பர்
இராசதப்பலன் துன்பம், தமசின்பலன் அறியாமை

17. சத்துவத்தில் ஞானம் தோன்றும்
இராசதத்தில் பேராசை, தமசிலிருந்து அறியாமை
மதிமடி மயக்கம் பிறக்கும்.

18. சத்துவர் மேலே செல்வர் இராசதர் நடுவில் நிற்பர்
தாழ்குணம் நிற்கும் தமசர் கீழ்கதி செல்வர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. காண்பான், எப்போது குணங்களை விட வேறுகருத்தாவைக்
காண்பதில்லையோ குணங்களுக்கு அப்பாலுள்ளதை
அறிகின்றானோ அப்போது அவன் என் நிலையை எய்துவன்

20. தேகத்தை ஆக்கிய இம்முக்குணம் கடந்து
பிறப்பு இறப்பு மூப்பு துன்பம் விடுபட்ட தேகி
சாகா நிலை எய்துகின்றார்ன்

அருச்சுனன் கூறினான்

21. பிரபு இம்முக்குணம் கடந்தவனை எக்குறி கொண்டறிவது
அவன் ஒழுக்கம் யாது? எவ்வாறு அவன் இம்முக்குணம்
கடந்தான்

பகவான் கூறினார்

22. பாண்டவா ஒளி, செயல், மயக்கம் வாய்ப்பின்
அவன் வெறுக்கான், இல்லாவிடத்து வேண்டுவதுமில்லை

23. விலகியவன் போலிருந்து குணங்களால் கலக்கமுறான்
குணங்களே தொழிற்படுவன என்று தன்னில் நிலைத்து
அசையாதிருப்பான்

24. இன்பதுன்ப ஒப்பு தன்னில் நிலைப்பு
மண்ணொடு பொன் ஒப்பு, இன்னா இனிய நிகர்ப்பு,
உறுதி, இகழ்புகழ் நிகர்வு, இவை உடையான்

25. மான அவமானத்தில் ஒரேநிலை, நண்பன் பகைவனிடத்து
ஒரே நிலை, செயல் துறத்தல் — இவை கொண்டுளான்
குணங் கடந்தவன் ஆவன்

26. நிலைகுலையா அன்புநெறியால் என்னை எவன் தொழுவனோ
அவன் இக்குணங்களைக் கடந்து பிரம்மமாதற்குத்
தகுதியுடையனாவன்

27. அழியா மாறிலியான பிரம்மத்திற்கும் என்றுமுள
அறத்திற்கும்
ஒரு தனிப் பேரின்பத்திற்கும் நானே உறைவிடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிமத் பகவத் கீதை

பதினைந்தாம் அத்தியாயம்

பகவான் கூறினார்

1. மேலே வேரும் கீழே கிளைகளும் உள்ளதான
அசுவத மரம் அழிவற்றது என்பர்
வேதங்கள் அதன் இலைகள் அதை அறிந்தவனே
வேதம் அறிந்தவன்

2. குணங்களால் செழுமை பெற்ற அதன் கிளைகள்
மேலும் கீழும் பரந்துள, புலப்பொருள்கள் அதன் தளிர்கள்
கீழே மானுட உலகில் அவை வேர் பரப்பி வினையை
விளைவிக்கின்றன

3. அதன் உரு இங்கு புலப்படுவதில்லை; அதன் ஆதி அந்தம்
இருப்பும் அறியப்படுவதில்லை. நன்கு வேரூன்றிய இந்த
அசுவத மரத்தைப் பற்றின்மையெனும் வாளால் வெட்டி

4. எங்கு போய் ஒருவரும் மீளுவதில்லையோ அப்பதம்
நாட வேண்டும். பண்டைப் பெருக்கு எங்கிருந்து
பாய்ந்ததோ அந்த ஆதிபகவனை நான் புகலடைந்தேன்

5. பற்றெனும் குற்றம் வென்று, செருக்கு மயக்கம் ஒருவி,
ஆன்மனில் என்றும் நிலைத்து ஆசை அறுத்து
இன்பதுன்ப இருமை கடந்து மயக்கம் நீங்கியோர்
அந்த அழிவிலாப் பதம் பெறுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. எங்கு ஞாயிறு ஒளிர்வதில்லை திங்களில்லை தீயில்லை
அதுவே என் உயர் உறைவிடம்
அங்கு சென்றவர் மீள்வதில்லை.

7. என் அனாதியான ஒரு பாகமே உயிருலகில்
ஓர் உயிராகி பிரகிருதியில் உறையும் மனதுடன்
கூடிய ஆறு புலன்களையும் இழுக்கின்றது.

8. காற்று தன் உறைவிடத்து மணங்களைக் கொண்டு
செல்வது போல் ஈசன் ஓர் உடலைக் கொண்டு
பின் நீங்கும் பொழுது இவற்றைக் கவர்ந்து செல்வான்.

9. சுவை ஊறு நாற்றம் காட்சி கேள்வி இவற்றொடு
மனத்தையும் பயன்படுத்தி அவன் புலப்பொருள்களை
நுகர்கின்றான்.

10. குணங்களோடு கூடி நிலைநின்று நுகர்ந்து
விட்டேகுபவனாயினும் அவனை மூடர் அறியார்
ஞானியர் அறிவர்.

11. முயல்வாரான யோகியர் அவனைத்தம்மில்
உறைபவனாய்க் காண்பர், முயல்வாராயினும்
பண்படாதார் அறிவிலிகள் அவனைக் காணார்

12. ஞாயிற்றின் எவ்வொளி உலகெலாம் ஒளி
விடுகின்றதோ, திங்கள் தீ இவற்றிலுள்ளதெதுவோ
அவ்வொளி என்னுடைய தறிக

13. என் வலுவால் புவிபுகுந்து உயிர்களைத் தாங்குகின்றேன்
சுவை சேர் திங்களாய்ப் பயிர்க்கெலாம்
ஊண் ஊட்டுவேன்

14. உலகுயிர் உடற்கனலாகிப் பிராணன் அபானனுடன்
பொருந்தி நால்வகை உணவைச் சேமிக்கின்றேன்.

15. எல்லோர் இதயத்திலும் உளன் நான்; நினைவு அறிவு
உள்ளமை இலாமை என்னாலாம்.
வேதங்கள் யாவற்றாலும் அறியப்படவேண்டியவன் நான்
வேதங்களை உணர்ந்தோனும் வேதாந்த ஆக்கியோனும் நானே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. அழிவுளன் அழிவிலன் என உலகில் புருடர் இருவரே
உருவுடையர் யாவரும் அழிவுளர்
உயர்நிலைப் பொருள் அழிவிலதாம்

17. ஆயின் உத்தமன் அத்தன் பரம்பரன் மூவுலகும் புக்கு நின்று
புரப்பவன் அழிவிலான் இறைவன் வேறானவன்

18. எதனால் அழிவன கடந்து அழிவிலாவற்றினும்
உயர்ந்துளனோ அதனால் உலகும் வேதங்களும்
என்னை உத்தமன் அத்தன் என்று கூறும்

19. உத்தமன் அத்தன் எனை எவன் இவ்வாறு
மதிமயக்கின்றி அறிவன் அவன் யாதும் உணர்ந்து
எனை முற்றுணர்வின் வணங்குகின்றான்.

20. பாபமற்றோய் மறைமிக்க இஞ்ஞானம் என்னால்
உரைக்கப்பட்டது. இதை அறிந்தோன் அறிஞனாய்
செயற்குரிய செய்வன் ஆவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிமத் பகவத் கீதை

பதினாறாம் அத்தியாயம்

1. அஞ்சாமை அகத்தூய்மை ஞானயோகங்களில்
ஊன்றல், ஈகை, புலனடக்கம், வேள்வி, கல்வியறிவு
தவம், நேர்மை

2. இன்னா செய்யாமை, வாய்மை, சினமின்மை, துறவு
பிறர் தீமை கருதாமை, உயிர்த்தயை, பிறன்பொருள்
விழையாமை, மென்மை, நாணம், மனவுறுதி

3. துணிவு, பொறை, உறுதி, தூய்மை, வஞ்சகமின்மை
செருக்கின்மை எல்லாம் தெய்வ இயற்கைக்குப்
பிறந்தவனுக்கு இயல்பாகின்றன

4. பகட்டு, செருக்கு, அகங்காரம், சினம், கொடுமை,
அறியாமை எல்லாம் அசுர இயற்கைக்குப்
பிறந்தவனுக்கு இயல்பாகின்றன.

5. தெய்வ இயற்கை விடுதலைக்கும் அசுர இயற்கை
கட்டுப்படலிற்கும் எனக் கொளப்படும். பாண்டவா
நீ வருந்தேல் தெய்வ இயற்கைக்குரியவனாய்
நீ பிறந்துளாய்

6. பார்த்த, உலகில் பிறப்பு தெய்விகம் அசுரம் என்
இருவகையது; தெய்விகம் பற்றி விரிவாகப் பகர்ந்தேன்;
அசுரம் பற்றியதை இனிக் கேள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. அசுர மக்கள் செய்யத்தக்கதெது செய்யத்தகாதது எது
என ஓரார்; தூய்மை நன்னடத்தை உண்மை
அவர்களிடம் இல்லை

8. உலகம் பொய்யானது அடிப்படையற்றது இறையில்லாதது
காமத்தாலாய ஆண்பெண் சேர்க்கையால் ஆயது
வேறென்ன உண்டு என்பர் அவர்

9. ஆன்மன் இழந்த கொடுவினையராய் சிறுமதியரான இவர்
இந்நோக்கோடு உலக அழிவிற்கு உலகப்பகையராய்
முளைக்கின்றனர்.

10. நிறைவுருக்காமம் கடைப்பிடித்து இடம்பம் செரு மதம்
இவற்றோடு இயைந்து மதிமயக்கால் கெட்ட
எண்ணங்களை மேற்கொண்டு தீய நோக்கொடு
தொழில்புரிவர்

11. சாவோடே முடியும் எல்லையில் கவலையுடையராய்
காமநுகர்வே உயர்வெனக்கருதி அது உறுதி எனத்துணிந்து

12. ஆசைக்கயிறு நூறுகளால் பிணிப்புண்டு
காமஞ் சினத்திற்கடியராய்க் காமநுகர்விற்கு
முறைகேடாய்ப் பொருட்குவியல் தேடுவர்

13. "இது இன்று என்னால் பெற்றது இவ்வாசையை
நிறைவேற்றுவேன், இது உளது, இன்னும் செல்வம் வந்துறும்"

14. "அப்பகைவன் என்னால் கொல்லப்பட்டான்; மற்றோரையும்
கொல்வன் நான் பெரியோன் போகமாள்பவன்
வெற்றியாளன் வலுவுடையோன் இன்புறுவோன்"

15. "செல்வன், உயர் குலத்தன் வேறு யார் எனக்கு ஒப்பான்
நான் வேட்பேன், ஈவேன், களிப்பேன்" என
அறியாமையில் திளைத்தவராய்

16. பல நினைவில் சித்தம் கலங்கியோர்
மோகவலையில் அகப்பட்டோர்
காமநிறைவில் பற்றுடையோர்
பாழ்நரகில் வீழ்வர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. தம்மையே புகழ்வார் வணக்கமிலார்
செல்வம் தரு செருக்கும் மதமும் உடையார்
பகட்டிற்காகப் பெயரளவில் முறைபிறழ்ந்து வேள்வி செய்வர்

18. செருக்கு வலு இறுமாப்பு காமம் சினம் கைக்கொண்டு
தம் உடல் பிறர் உடல் உறையும் என்னைப்
பகைப்பர் இக்கெடுமதியாளர்

19. மனிதருள் பதரான இவ்வெறுப்புடையோரை
பிறந்திறந்துழல் உலகங்களில் அசுரக்கருப்பைகளில்
நான் மீள மீளத் தள்ளுவேன்

20. இவ்வறிவழிந்தார் பிறவிதொறும் அசுரக்கருப்பை உற்று
எனை அடையாமல் முன்னையதிலும் கீழ்நிலையை
அடைவர் கௌந்தேய

21. ஆன்மனை அழித்து நரகிற்கு வழிகாட்டும்
வாயில்கள் மூன்றுள; காமம் குரோதம் உலோபம்
என்பவை அவை; எனவே இம்மூன்றையும்
தள்ள வேண்டும்.

22. கௌந்தேய இருள்வாயில் இம்மூன்றும் தவிர்த்தான்
தனக்கு நல்லது செய்துபின் உயர்கதி அடைகின்றான்

23. அறநெறியைக் கைவிட்டுக் காமவாய்ப்பட்டு ஒழுகுபவன்
நிறைவோ இன்பமோ உயர்கதியோ அடையான்

24. எனவே செயத்தக்கது தகாதது என்பதைத் துணிவதில்
அறநூல் உனக்குக் கட்டளையாகுக அறநெறிக்
கட்டளைகளை உணர்ந்தபின் செயல் புரிவாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிமத் பகவத்கீதை

பதினேழாம் அத்தியாயம்

அருச்சுனன் கூறினான்

1. ஆயின் கண்ணா அறநெறிவிட்டுப் பேரன்புடன் தொழுவார்
நிலை இராசதமா சாத்துவிகமா தாமசமா?

பகவான் கூறினார்

2. மனிதர்க்கு இயற்கையால் உண்டான சிரத்தை
சாத்துவிகம் இராசதம் தாமசம் என மூவகைப்படும்
அதைக் கேள்.

3. எல்லோர் சிரத்தையும் அவரவர் இயல்பின்படியாம்
புருடன் சிரத்தை வடிவானவன், எவ்வகைச் சிரத்தை
உடையான் ஒருவன் அவன் அவ்வகையானவனே

4. சாத்துவிகர் தேவரையும் இராசதர் யட்சர் இராக்கதரையும்
மற்றைத் தாமசர் பிரேத பூதகணங்களையும் தொழுவர்

5-6. அகந்தை இடம்பத்திறகு ஆட்பட்டு
காமப் பற்றில் ஊறி உடலிலுள
இந்தியங்களையும் உடலுள் உறையும் என்னையும்
வருத்தி அறநெறி விதிக்காத கொடுந்தவம் புரியும்
அறிவிலோர் அசுரவழி ஒழுகுவார் என அறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. ஒவ்வொருவரும் உவக்கும் உணவும் மூவகையது
வேள்வி தவம் தானமும் அவ்வாறே அவற்றின்
வேற்றுமையைக் கேள்

8. உயிர்ப்பு, ஆற்றல், வலு, உடல்நலம், ஊக்கம் சுகம்
விருப்பு வளர்ப்பன
சுவை ஊட்டம் உரம் இன்பம் பயப்பவை
சாத்துவிகர் உவக்கும் உணவுகள்

9. கசப்பு, புளிப்பு, உவர்ப்பு கடுஞ்சூடு காரம் உயர்வு
எரிவு மிக்கு, துன்பம் துயர் பிணி பயக்கும்
உணவுகள் இராசதர் உவப்பவை

10. காலங்கடந்த சுவையிழந்த புளித்த பழைய
உண்டெஞ்சிய தூய்மையற்ற உணவு
தாமசர்க்கு உவந்தது

11. பயன் விரும்பாதாரால் செயற்பாலது கடமை என
மனத்திருத்தி விதிமுறைப்படி செய்யப்படும்
வேள்வி சாத்துவிகமாகும்.

12. பரதப்பெரியோய் பயனை நாடியோ பகட்டிற்கோ
ஆற்றப்படுவது இராசத வேள்வியாகும்.

13. முறைதவறிய உணவளிக்கப்படாத மந்திரம்
கைப்பொருள் இல்லாத சிரத்தை இல்லாத
வேள்வி தாமசம் எனப்படும்.

14. தேவர், அந்தணர், குரு அறிஞரைப் போற்றல்
சுத்தம் நேர்மை பிரம்மச்சாரியம் இன்னாசெய்யாமை
இவை உடல்தவம் எனப்படும்.

15. கொடிதின்மை, வாய்மை அன்பு நலன்சேர் சொல்
வேதநூல் ஓதும் வழக்கு எல்லாம்
சொல் இயன்ற தவம் எனப்படும்.

16. மனத்தெளிவு, அன்புடைமை, மௌனம்
தன்னடக்கம் தூயநோக்கு இவை மனத்தவம் எனப்படும்.

17. பயன்பற்றில்லாத உளஉறுதியுடையவர்
உயர் சிரத்தையுடன் செயும் இம்மூன்று தவமும்
சாத்துவிகம் என்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. புகழ் பெருமை போற்றல் பொருட்டு
இடம்பத்துடன் செய்யும் தவம் நிலையிலாதது
உறுதியற்றது அது இராசதம் எனப்படும்

19. மூடமைப்பட்டுத் தன்னை வருத்தியோ பிறரை
அழிக்கவோ செய்யும் தவம் தாமசம் எனப்படும்.

20. உவந்த இடத்திலும் காலத்திலும் தகை உடையார்க்குக்
கொடுப்பது கடமை என்று எதிர்ப்பலன் கருதாது
கொடுபடும் ஈகை சாத்துவிகம் எனப்படும்.

21. எதிர்ப்பலனோ கொடையோ கருதியும்
விருப்பின்றியும் கொடுத்தல் இராசதம் எனப்படும்.

22. உவவா இடத்திலும் காலத்திலும் தகையிலார்க்கு
மதிப்பின்றி இகழ்ந்து செய்யும் கொடை
தாமசம் எனப்படும்

23. ஓம் தத் சத் என்னும் மும்மொழியால் பிரம்மத்தைக்
குறித்தனர்; அதனால் பண்டு பிராமணங்கள்
வேதம் வேள்விகள் படைக்கப்பட்டன.

24. அதனால் பிரம்மவித்தை பயில்வோர் விதிமுறையான
வேள்வி தானம் தவங்களை
ஓம் என்று ஒலித்துத் தொடங்குவர்

25. தத் என்று சொல்லிப் பயன் கருதாது வீடு நாடுவாரால்
பல்வகை வேள்வி தவம் தானங்கள் செய்யப்படுகின்றன.

26. பார்த்த, மெய்ம்மையும் நன்மையும் என்ற பொருளில்
'சத்' எனும் சொல் பயன்படும். அவ்வாறே அச்சொல்
மங்களச் செயல்களிலும் ஆளப்படும்.

27. வேள்வி தவம் தானங்களில் நிலைபெறுதலும்
சத் எனப்படும். இவற்றோடியைந்த வினைகளும்
சத் எனப்படும்.

28. நம்பிக்கையின்றிச் செய்யப்படும் வேள்வி
தானம் தவம் மேற்கொள் வினையும் எல்லாம்
அசத் எனப்படும். அது இம்மை மறுமை
இரண்டிற்கும் உதவா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிமத் பகவத் கீதை

பதினெட்டாம் அத்தியாயம்

அருச்சுனன் கூறினான்

1. கண்ணா, தடந்தோளாய், கேசியை அழித்தோய்
துறவு, தியாக தத்துவங்களைத் தனித்தனி
அறிய அவாவுகின்றேன்

2. பற்றியைந்த செயல் துறத்தலே துறவு என்பர்
ஞானியர்.
செயற்பயன் கைவிடலே தியாகம் என்பர்
அறிவோர்

3. கருமம் தீமையது துறத்தற்குரியது என்பர் அறிஞர் சிலர்.
வேள்வி தானம் தவங்கள் துறக்கத் தக்கனவல்ல
என்பர் வேறு பிறர்.

பகவான் கூறினார்

4. பரதரிற் பெரியோய் மனிதரில் உயர்ந்தோய்
அவற்றுள் தியாகம் பற்றிய என் முடிவைக் கேள்
தியாகம் மூவகையது எனப்பட்டுள்ளது.

5. வேள்வி தான தவ கருமங்கள் விடவேண்டியனவல்ல,
அவை செய்யத் தகுந்தவை; வேள்வி தானம் தவம்
ஞானிகளையும் தூய்மையாக்குவனவாம்.

6. இச்செயல்களும் இவை அனையவும் பற்று பலன் விட்டுச்
செயற்குரியன என்பது என் உறுதியான
உண்மையான கருத்தாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. கடமைப் பணிகளைக் கைவிடல் செவ்விதன்று
மயக்கத்தால் அவற்றைக் கைவிடல் தாமசம் ஆகும்

8. மெய்வருந்தல் அஞ்சி எவன் கருமம் கைவிடுவனோ
அவன் இராசத தியாகம் செய்தும் தியாக பலன்
எய்தான்

9. அருச்சுன, செயற்கடவவிவை என்று செயற்பாலவற்றை
பற்று பயன் அற்று ஆற்றுதல் சாத்துவிகத் துறவாகும்.

10. துன்பவினை வெறுக்கான் இன்பவினை விரும்பான்
சத்துவம் பொலிந்து ஐயம் தெளிந்த அறிவாளி.

11. உடல் கொண்டவன் ஒருவன் அறவே
கருமம் கைவிடல் இயலாது
ஆயின் கரும பலன் துறந்தவனே
தியாகி எனப்படுவான்

12. துறவாதார் இறந்தபின் இன்பம் துன்பம்
கலப்பு ஆம் முக்கரும பலன் வந்துறும்.
துறந்தார்க்கு இது உறாது.

13. செயல் இறுதி கூறும் சாங்கியம்
கரும வெற்றிக்கு உரைக்கும் காரணி
ஐந்தினையும் என்னிடமிருந்து உணர்வாய்

14. செயலோன், அவன் உறைவிடமான உடல்,
பல்வகை இந்திரியங்கள் வெவ்வேறான செயல்கள்
இவற்றிற்கு ஐந்தாவதாகத் தெய்வம்
யாவும் காரணங்கள்.

15. உடல் உரைவளம் இவற்றால் மனிதன்
நெறிமுறையிலோ எதிர்முறையிலோ எக்கருமம் செய்யினும்
இவ்வைந்தும் அதன் காரணங்கள்.

16. இவ்வாறு இது இருக்கவும், செம்மையற்ற
புத்தியால் எவன் ஆன்மனை
முழுமுதல் கருத்தா எனக் காண்பனோ
அவன் அறிவிலி நன்று காண்கிலன்

17. எவனுக்கு அகந்தைக் கருத்து இல்லையோ எவன்
புத்தி மாசுறுவதில்லையோ அவன் இவ்வுலகுயிர்களைக்
கொல்லினும் அவன் கொல்வதுமில்லை
பிணிப்புறுவதுமில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. அறிவு அறிபடுபொருள் அறிவான் எனக்
கருமத்திற்கு உந்தல் மூவகை; கருவி கருமம் கருத்தா
எனக் கருமத்திற்கு அடிப்படை மூவகை

19. ஞானம் கருமம் கருத்தா குணபேதத்தால்
மூவகை என சாங்கியம் கூறும்
அவற்றை உள்ளவாறு கேள்.

20. பிரிவுபட்ட உயிர்கள் யாவிலும் வேறிலா அழிவிலா
ஒரு பொருளை ஒருவன் எதனால் காண்கின்றான்
அந்த ஞானம் சாத்துவிகமாம் அறிக

21. எல்லாப் பூதங்களிலும் வெவ்வேறுயிர்களை
எவ்வறிவு அறிகிறது அவ்வறிவு இராசதம்; அறிக

22. உண்மைக்கு ஒவ்வாததாய் யுத்தியற்றதாய்
சிறுமையால் எந்த ஞானம் தனி ஒரு செயலையே
முழுமை என்று நிற்கின்றதோ அது தாமசம் எனப்படும்.

23. பலன் விரும்பானால் பற்றின்றி விருப்பு வெறுப்பின்றி
செய்யப்படும் கருமம் சாத்துவிகம் எனப்படும்

24. பலன் விரும்பியோ அகந்தையுடனோ பெரும் பிரயாசையுடன்
செயப்படும் கருமம் எதுவோ அது இராசதம் எனப்படும்.

25. உடன் விளைவு இழப்பு பிறர்க்கின்னா
தன் ஆண்மை இவற்றை எண்ணிப்பாராது
மயக்கத்தால் தொடங்கிய கருமம்
அது தாமசம் எனப்படும்.

26. பற்றின் நீங்கி, நான் என்பதின்றி உறுதியும்
உரமும் உடையனாய் வெற்றி தோல்வியில்
மாறுபாடிலாதானாய் விளங்கும் செயலோன்
சாத்துவிகன் எனப்படுவான்.

27. ஆசையாளன் கருமபலன் விரும்புவான்
உலோபி இன்னா நோக்கன், தூய்மையிலான்
இன்பதுன்பத்திற்கு ஆளாவான் ஆகிய
செயலோன் இராசதன் எனப்படுவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28. உறுதியிலான் பண்படாதான் செருக்கன்
நேர்மையிலான் தீச்செயலோன் சோம்பி
மனந்தளர்ந்தோன், வினை நீடிப்போன்
ஆகிய செயலோன் தாமசன் எனப்படுவான்

29. தனஞ்செய புத்தி திடம் இரண்டினதும் மூவகை
வேற்றுமையை குணமுறையால் வகைப்படுத்தி
முற்றுறக் கூறுவேன் கேள்.

30. பார்த்தா, செயல் செயலிலாமை செயத்தகுவ
செயத்தகாதன அச்சம் அஞ்சாமை பற்று
விடுதலை இவற்றை எது உணர்கிறதோ
அப்புத்தி சாத்துவிகம்

31. பார்த்தா அறம் மறம் செயத்தகுவ செயத்தகா
இவற்றைப் பிறழ்ந்து எப்புத்தி அறிகிறதோ
அது இராசதம்

32. பார்த்தா இருளான் சூழப்பெற்று மறத்தை
அறமென்றும் எப்பொருளையும் பிறழ எப்புத்தி
கருதுகின்றதோ அது தாமசம்.

33. பார்த்தா, நெறிபிறழா எத்திடத்தால்
மனம் பிராணன் இந்திரியம் இவற்றின்
செயல்கள் யோகத்தால் காக்கப்படுகின்றனவோ
அத்திடம் சாத்துவிகம்.

34. பார்த்தா எத்திடத்தால் அறம் பொருள் இன்பம்
காக்கப்படுகின்றனவோ ஆழ்பற்றால் பலன்
அவாவப்படுகின்றதோ அத்திடம் இராசதம்

35. பார்த்தா அறிவிலி ஒருவன் எத்தால்
தூக்கம் அச்சம் துயர் கலக்கம் செருக்கு
இவற்றை விடுவதில்லையோ அது தாமசம்

36. பரதர் ஏறே மூவகை இன்பம் பற்றிக்கேள்
பயிற்சியால் அனுபவித்துத் துன்பத்தின்
இறுதியை இத்தால் காண்பான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

37. ஆதியில் நஞ்சுபோல் தோன்றி இறுதியில்
அமுதம் போலாகும். தன்னை உணர்ந்த
அறிவால் உதித்த இவ்வின்பம் சாத்வீகம் எனப்படும்

38. புலன்களாலும் அவை துய்க்கும் பொருள்களாலும்
எழும் இன்பம் ஆதியில் அமுதம் போலாகி
இறுதியில் நஞ்சாகும். இது இராசதம்
என நினைவிற்கொள்

39. உறக்கம், சோம்பல் மயக்கம் இவற்றால் எழும்
இன்பம் ஆதியிலும் முடிவிலும் தன்னை ஏமாற்றும்.
இது தாமசம் எனப்படும்.

40. இயற்கையிற் பிறந்த முக்குணங்களினின்றும்
விடுபட்ட உயிர் மண்ணுலகிலோ
விண்ணுலகில் தேவர்களிடையோ இல்லை.

41. பகைவரைக் காய்வோய், அந்தணர் அரசர் வைசியர்
சூத்திரர்க்கு அவர் இயற்கைக் குணங்கட்கியைய
கருமங்கள் வகுக்கப்பட்டுள.

42. அக அடக்கம் புற அடக்கம் தவம் தூய்மை
பொறுமை நேர்மை நூலறிவு அனுபவ அறிவு
கடவுள் நம்பிக்கை எல்லாம் இயற்கையில் ஆய
அந்தணர் கருமங்களாம்.

43. சூரத்தனம், ஒளி, திடம், திறமை, போரில் புறங்காட்டாமை,
கொடை, இறைநிலை எல்லாம் இயற்கையின் ஆய
அரச கருமங்கள்

44. கமம், பசுப்போற்றல், வணிகம் இவை இயற்கையின்
வணிக கருமங்கள்; பிறர் சேவை சூத்திரர்க்காய
இயற்கையின் கருமம்.

45. தனக்காய கருமத்தில் ஈடுபட்டு மனிதன் உயர்சித்தி
பெறுகிறான்; தன் கருமத்தில் அமைதி கொண்டான்
எவ்வாறு செம்மை நிலை அடைகிறான் என்பதைக் கேள்.

46. உலகத்து உயிர்கள் யாவும் தோற்றுமிடமாய்
அமைந்தானை எங்கும் நிறைந்துள்ளானை
தன் கருமம் மூலம் வணங்குவதால்
மனிதன் செம்மை நிலை அடைகிறான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

47. பிறர் கருமத்தைச் செம்மையுற ஆற்றுதலில்
தன் கருமத்தை செம்மையின்றி ஆற்றுதல் மேலாகும்.
தன் இயற்றைக்கு ஏற்ப நியமிக்கப்பட்ட கருமம்
ஆற்றுதலால் தீமை ஏற்படாது.

48. குந்திமகனே, தன்னுடன் தோன்றிய கருமத்தில்
குறையிருப்பினும் அதை நிராகரித்தல் ஆகாது
தீயைப் புகை சூழ்ந்தவாறு கருமங்கள்யாவும்
குறை சூழ்ந்தவை.

49. என்றும் கட்டுண்ட சிந்தனையின்றி பற்றின்றி
தன்னடக்கம் உடையான் துறவால் செயலற்ற
உயர்நிலை அடைவான்.

50. குந்திமகனே, இத்தகைய உயர்நிலை அடைந்தோன்
எவ்வாறு உயர் ஞானமெனும் பிரம்ம நிலை
அடைகிறான் என்பதைக் கேள்.

51. தூய அறிவு பொருந்தியனாய் தன்னையடக்கியோனாய்
இந்திரியப் பொருள்களைத் துறந்து
விருப்பு வெறுப்பின்றி

52. தனிமையில் உறைந்து அற்ப உணவுடையோனாய்
யோகதியானத்தில் ஈடுபட்டு நடுநிலை எய்தியோனாய்

53. ஆணவம் வன்மை செருக்கு அவா குரோதம்
உடைமைப்பற்று இவற்றைத் துறந்து
தன்னலமின்றி அமைதியுற்றோன்
பிரம்மத்தில் ஒன்றும் தகைமை உறுவான்

54. பிரம்மனில் ஒன்றி அமைதியுற்றோன் வேட்கையோ
கவலையோ இன்றி உயிர்கள் யாவற்றிலும்
சமநோக்குடன் என்னில் உயர்பக்தி கொள்வான்

55. என்னில் பக்தி பூண்டு உண்மையில் நான் யார்
எத்தகையோன் என அறிவான்.
அவ்வாறு அறிந்து என்னில் உறைவான்

56. என்னில் சரண்புகுந்து தொடர்ந்து கருமங்கள்
ஆற்றுவான் என் அருளால் அழியாநிலை அடைவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

57. மனத்தில் எல்லாச் செயல்களையும் எனக்கு அர்ப்பணித்து
என்னையே உயர் குறிக்கோளாக்கி புத்தியோகத்தால்
என்னில் மனத்தை நிலைபெறச் செய்.

58. என்னில் மனத்தை நிறுத்தி என் அருளால் தடைகள்
யாவும் நீக்குவாய்; ஆயின் ஆணவத்தால்
என்னைக் கேளாவிடில் அழிவுறுவாய்

59. ஆணவத்தில் மூழ்கிப் 'போரிடேன்' என எண்ணில்
அவ்வுறுதி வீணாகும்; உன் இயல்பே உன்னை உந்தும்.

60. குந்தி மகனே, மயக்கத்தால் செய்ய விரும்பாதவற்றையும்
உன் இயல்பால் உன் வினையால் கட்டுண்டு
உன் விருப்பிற்கெதிராக நீ செய்வாய்.

61. எல்லா உயிர்களின் இதயங்களிலும் இறைவன்
உறைகின்றான் அருச்சுனா; தன் மாயையால்
எந்திரம் ஒன்றில் பொருத்தினாற்போல் யாவற்றையும்
அசையச் செய்வான்.

62. அவனையே முற்றிலும் சரணடை பரத
அவன் அருளால் உயர் அமைதி தரும்
அழியா நிலை பெறுவாய்

63. இவ்வாறு உயர் மறைபொருளான ஞானம்
உனக்கு உரைத்துளேன்
இவ்வுரை முழுமையும் உன் சிந்தையிற் கொண்டு
உன் விருப்பிற்கியைய ஒழுகுவாய்

64. இன்னும் கேள், என் உயர் வாக்கியம் இது.
என் விருப்பிற்குடையோன் நீ ஆதலின்
உன் நன்மையே உரைப்பன்.

65. என்னையே நினைந்திரு, என்னையே அன்பு செய்
எனக்கே அர்ப்பணி, என்னையே வணங்கிடு
இவ்வாறு என்னை அடைவாய்
என் பிரியன் உனக்கு இது என் வாக்கு

66. எல்லாத் தருமங்களையும் துறந்து
என்னையே சரண் அடை
எல்லாப் பாபங்களினின்றும் உன்னை
விடுவிப்பேன் கவலையுறாதே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

67. தவமிலான் பக்தியிலான் உரைகேளான்
என்னை இகழ்வானிடம் இவ்வாக்கியம் கூறத்தகாதது

68. என்னில் உயர்பக்தியுடன் என் அடியார்க்கு
இவ்வாக்கியம் உரைப்பான் ஐயமின்றி என்னை அடைவான்.

69. இப்புவியின் மனிதருள் அவனே எனக்கு இனியன்
அவனே இன்பணி ஆற்றுபவன்.

70. எமது இப்புனித உரை கேட்பான்
ஞான வேள்வியால் என்னை அன்பு செய்தான்
என்பதே என் கருத்து

71. இகழ்வின்றி நம்பிக்கையுடன் இவ்வுரை
கேட்போனும் விடுதலை பெற்றுப்
புண்ணியம் செய்தோரின் இன்ப
உலகம் அடைவான்.

72. பார்த்தா, ஒன்றிய மனத்துடன் இவ்வுரை கேட்டனையோ
உன் அறியாமையும் ஐயமும் அகன்றனவா தனஞ்செய?

அருச்சுனன் கூறினான்

73. அச்சுதா உன் அருளால் என் மயக்கம் கலைந்து
அறிவு தெளிந்தது;
ஐயம் நீங்கி உன் சொல் பணிய நிற்கின்றேன்.

சஞ்சயன் கூறினான்

74. இவ்வாறு வாசுதேவனுக்கும் உயர்ந்தோன்
பார்த்தனுக்குமிடை நிகழ்ந்த இவ்வற்புத
உரைகேட்டுப் புல்லரித்து நின்றேன்.

75. வியாசரின் அருளால் இவ்வுயர் யோகத்தை
யோகத் தலைவனான கிருஷ்ணன் நேரில் உரைக்கக்
கேட்டவனானேன்

76. மன்னவா, கேசவனுக்கும் அருச்சுனனுக்குமிடை நிகழ்ந்த
இவ்வற்புத புண்ணிய உரையினை
நினைந்து நினைந்து இன்புறுகின்றேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

77. அரியின் அதியற்புத உருவத்தை
நினைந்து வியந்து மீண்டும்
மீண்டும் இன்புறுகின்றேன்

78. யோகத் தலைவனான கிருஷ்ணன் எங்குற்றானோ
வில்வீரன் பார்த்தன் எங்குற்றானோ, அங்கு
சீரும் வெற்றியும் நன்மையும் நீதியும்
ஓங்கும் என்பதே என் எண்ணம்.

29 DEC 2021
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. [illegible]

18. [illegible]

29 DEC 2021
LIBRARY

704892

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org